பக்கங்கள்-16 | 13.பங்குனி.2022 | விலை–40.00






# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –376

## இலங்கை அரசியலில் காய்நகர்த்தும் ரணில் விக்ரமசிங்க



## தமிழினப் படுகொலையும் இன்றைய அரசியலும்




## மகளிர் தினமும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளும்

## உலக வல்லரசுகளின் உதைப்பந்தாட்ட களமாக மாறியுள்ள உக்ரைன்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# இலங்கை அரசியலில் காய்நகர்த்தும் ரணில் விக்ரமசிங்க



**ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இலங்கையின் அரசியல்வாதி. இலங்கை அரசியலில் தவிர்க்கப்பட முடியாத ஒரு ஆளுமை. தந்திரங்கள், நெளிவுசுழிவுகள், இராஜதந்திரச் செயற்பாடுகள், காய்நகர்த்தல்களுக்கு பெயர்பெற்றவராக இன்றும் இலங்கையின் அரசியலில் பலரால் சுட்டிக்காட்டப்படக்கூடியவர்.** 1994 முதல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும், மூன்று தடவைகள் பிரதமராகவும், 1994-2001, 2004-2015 காலப்பகுதிகளில் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்து நாட்டின் பல முக்கிய தீர்மானங்களுக்கு பக்கபலமாக இருந்தவர். காமினி திசாநாயக்கா 1994 அரசுத்தலைவர் தேர்தல் பரப்புரைக் காலத்தில் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 1993 முதல் 1994 வரையும், பின்னர் 2001 முதல் 2004 வரையும் பிரதமராகப் பதவியில் இருந்தார். 1999இல் சந்திரிகா பண்டாரநாயக்காவிடமும், 2005இல் மகிந்த ராசபக்சவிடமும் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி அடைந்தவர். 2015 ஜனவரி 8 இல், விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இலங்கையின் 21-வது பிரதமராக நியமிக்கப்பட்டார்.

எனினும், 2018 ஒக்டோபர் 26 இல் விக்கிரமசிங்க மைத்திரிபால சிறிசேனவினால் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டார். இதனை விக்கிரமசிங்க அரசியலமைப்புச் சட்டத்திற்குப் முரணானது எனக் கூறி பதவி விலக மறுத்தார். இதனை அடுத்து, அரசியலமைப்பு நெருக்கடி ஏற்பட்டது. விக்கிரமசிங்கவைப் பதவி விலக்கியது அரசியலமைப்புக்கு முரணானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதை அடுத்து, 2018 டிசம்பர் 16 இல் விக்கிரமசிங்கவிற்கு மீண்டும் பிரதமர் பதவி வழங்கப்பட்டது. 2019 அரசுத் தலைவர் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றதை அடுத்து, விக்கிரமசிங்க 2019 நவம்பர் 20 இல் பிரதமர் பதவியைத் துறந்தார். இவர் 2020 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டாலும், இவரது கட்சியில் இருந்து எவரும் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி உட்கட்சிப் பிரச்சினைகளால் இரண்டாகப் பிளவுபட்டது. சஜித் தலைமையில் ஒரு அணி ஐக்கிய மக்கள் சக்தி என செயற்பட்டு வருகிறது. இருப்பினும், ரணில் அணிக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனம் மூலம் ரணில் விக்ரமசிங்க அவர்களே நீண்ட இழுபறிக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் 2021 ஜூன் 23 அன்று நாடாளுமன்றம் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றபொழுது, சிங்களத் தலைவர்கள் தங்களது தந்திரங்களால் பலரையும் விலைக்கு வாங்கினர். தமிழ் தலைவர்களை வைத்தே முதல் அரசாங்கத்தை உருவாக்கினார் சேனநாயக்கா. தொடக்கத்தில் சிங்களத் தலைவர்கள் வாய் வார்த்தைகளாக இனவாதத்தை வளர்த்தார்கள். பின்னர் ஆதரவு கொடுத்த தமிழ்த் தலைவர்களைக் கொண்டே சட்டபூர்வமாக்கினார்கள். பின்னர் சட்டம் உருவாக உதவிபுரிந்த தமிழ்த் தலைவரகள் முரண்பட்டு பிரிந்து நின்றார்கள். இதில் ஜி.ஜி பொன்னம்பலம், தந்தை செல்வா போன்றோர் அரசியல் சக்திகளாக வளர்ந்தார்கள். ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றது முதல் இலங்கை என்பது சிங்களவர்களின் நாடு என்று பல பேர் கனவு கண்டார்கள். இதற்காக தங்களை இனவாத தலைவர்களாக மாற்றி எந்த அளவிற்கு இலங்கையின் சரித்திர பக்கங்களை கேவலமாக மாற்ற முடியுமோ அந்த அளவிற்கு வாழ்ந்த ஒவ்வொரு ஆட்சியாளர்களும் வாழ்ந்து காட்டினார்கள். துங்களையும் பலிகொடுத்து அப்பாவி பொது மக்களையும் பலியாக்கி அடுத்தவருக்கு வழிகாட்டியாய் வாழ்ந்து முடித்தனர். மேற்கத்தேய நாடுகளுக்கு அன்றும் இன்றும் என்றும் தனது செயற்பாடுகளை அல்லது நிகழ்ச்சிநிரலை செயற்படுத்திக்கொள்ள வேண்டிய ஆட்கள் மட்டுமே போதுமானதாக இருந்தது. இதுவே தான் இன்றைய அரசாங்கம் வரைக்கும் தொட்டுத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்றால் அது பொய்யல்ல.

இலங்கையின் தேச அரசியல் இன்று சர்வாதிகார அரசியலாக மாறிப்போயுள்ளது. இன்று சர்வதேச அரசியலே பிரதான பங்காகி இலங்கையை நாகரிக பிச்சைக்கார நாடாக மாற்றியுள்ளது. ஒரு இனத்தின் வீழ்ச்சியை, அழிவை தங்களது வெற்றியாகக் கருதிக்கொண்டுகொண்டாடித்தீர்க்கவேண்டும் என்று விடுமுறை கொடுத்த ஜனநாயக அரசாங்கம் உலகத்தில் இலங்கையைத் தவிர வேறு எதுவும் இருக்குமா?

1947 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற ஆசனங்கள் 42. **இனக்கலவரத்துக்கு புதிய அத்தியாயம் வகுத்துக்கொடுத்தவர் ஜே.ஆர். ஒவ்வொருவரும் ஆட்சிக்கு வரும்போது தங்கள் பதவியைக் காப்பாற்றிக்கொள்ள செய்யப்பட்ட ஒவ்வொரு காரியங்களுக்குப் பின்னாலும் பாதிக்கப்பட்டது தமிழினம் தான்.** 2002 பிரதமராக வந்தமர்ந்த ரணில் விக்ரமசிங்க வேண்டுகோளின் படி நோர்வே சமாதான முயற்சிகளை முன்னெடுக்கக் கூறியது. ரணில் விக்ரமசிங்கவுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் ஆறு சுற்றாக தாய்லாந்தில் தொடர்ந்து ஜப்பானில் 2003இல் முடிந்தபோது முட்டி மோதிக் கொண்டிருந்த சந்திரிக்காவும் ரணிலும் இணைந்து சர்வதேச ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர். ஜேஆர் உருவாக்கிய பாதையின் முடிவு ரணில் அவர்களுக்கு உதவியது. ஜேஆர் இரண்டு முறை ஆட்சியில் இருந்தபோதும் தமிழர் எதிர்ப்பு என்ற கொள்கையை மாற்றிக்கொள்ளவே இல்லை. இந்நிலை இன்றும் தொடர்கின்றது. உலகப் பார்வையில் அப்பாவியாகத் தெரியும் ரணில் விக்ரமசிங்க, சமாதானக் காலத்தில் தந்திரமாகச் செயற்பட்டு தமிழர் தரப்பின் நுணுக்கங்களை திறம்பட அறிந்துவைத்திருந்தார். பலமானவர்கள், பலவீனமானவர்கள் யார் என்பதையெல்லாம் தெரிந்து கொண்டார். வடகிழக்கில் இலங்கை இராணுவத்தினர் மற்றும் புலனாய்வினர் ஊடுருவ இந்த சமாதான காலமே வழிவகுத்தது. ரணில் அவர்கள் தந்திரமாகக் காய்நகர்த்தி கருணாவை விடுதலைப்புலிகள் இயக்கத்தைவிட்டு எப்படி வெளியே கொண்டு வந்தாரோ அதைப்போல அவரின் ஆட்சியில் தான் பல விடயங்களை மறைமுகமாக செய்யத் தொடங்கினார். சந்திரிக்கா - ரணில், மைத்திரி - ரணில் இந்தக் கூட்டணிகள் வேறு வேறு கட்சிகளாக இருந்தாலும் இவர்கள் அனைவரும் சிங்களவர்கள். இது சிங்கள நாடு. சிங்களவர்களே இந்த நாட்டை ஆளவேண்டும் என்பதில் மாத்திரம் இவர்களுக்குள் ஒற்றுமை உண்டு. ரணில் அவர்கள் எப்போதும் மேற்கத்தேய நாடுகளுடன் நல்லுறவைப் பேணிவந்தார். சந்திரிக்கா அம்மையாரின் ஆட்சியில் ஏராளமான பணம் போருக்காக செலவிடப்பட்டது. இதனால் அரசு தடுமாறியது. கஜானா காலியானது. ரணில் மேற்கத்தேய நாடுகளின் செல்வாக்கினைப் பெற்றிருந்ததால் சந்திரிக்கா - ரணில் இருவரும் இணைந்து கடன் வாங்குவதும், சர்வதேச ஒப்பந்தங்களைச் செய்வதுமாக செயற்பட்டனர். ரணில் அரசாங்கத்துடன் நடத்தப்பட்டுக்கொண்டிருந்த ஒவ்வொரு சுற்றுப்பேச்சுவார்த்தையின் போதும் உறுதியளித்திருந்தபடி எந்தச் செயற்பாடுகளும் நடைமுறைக்கு வரவில்லை. இதுவே பிரபாகரனின் மனதில் ஏராளமான கேள்விகளையும் வெறுப்பினையும் உருவாக்கியதாகக் கூறப்படுகிறது.

ரணிலின் செல்வாக்கினை மட்டுப்படுத்த திட்டம் தீட்டிய சந்திரிக்கா அம்மையார் தான் நாடாளுமன்றத்தை கலைக்க ஜேவிபியுடன் கூட்டணியையும் அமைத்து, ரணில் விக்ரமசிங்கவின் பதவிக்காலம் நிறைவடைய 03 ஆண்டுகள் மீதமிருந்த நிலையில் அவர் அமெரிக்கா சென்றிருந்த சந்தர்ப்பம் பார்த்து 2004 பெப்ரவரி 07 அன்று நாடாளுமன்றத்தைக் கலைத்தார். பின்னர் அவசரப்பட்டதை உணர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லீம் காங்கிரஸ், மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மனோ கணேசன் உட்பட்ட கூட்டணியினருடன் இணைந்து மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசை உருவாக்க பின்னணியில் இருந்து செயற்பட்டார் எனவும் இன்றுவரை கூறப்படுகின்றது.

**இவ்வாறு இலங்கையின் அரசியல் ஆடுகளங்களில் மாறி மாறி களமாடிய அனுபவத்தை நன்கு கற்றுவைத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் செயற்பாடுகள் அனைத்தும் ஏதோ வொன்றின் காய்நகர்த்தலாகவே பார்க்கப்படும்.** தான் சார்ந்த கட்சிக்குள் பிரச்சினைகள் ஏற்பட்டபோதும் தலைமைத்துவப் பதவியினை யாருக்கும் விட்டுக்கொடுக்காமல் விடாப்பிடியாக செயற்பட்டவர். நீண்டகாலமாக கட்சிக்குள் இருந்த சஜித் அவர்களை ஜனாதிபதி வேட்பாளராக உடனேயே அறிவிக்காமல் நீண்ட இழுத்தடிப்புக்குப் பின்னர் அறிவித்தவர். இளம் தலைமுறயினருக்கு கட்சிக்குள் பதவிகள் வழங்கப்படவேண்டும் என்கிற கோரிக்கைகளை எல்லாம் கண்டும் காணாமல் விட்டவர். யார் என்ன கூறினாலும் பரவாயில்லை யார் கட்சிக்குள் இருந்தாலும் பரவாயில்லை தான் இருக்கும் மட்டும் தானே கட்சியின் தலைவராகத் திகழவேண்டும் என்ற கொள்கையில் அன்றிலிருந்து இன்று வரை உறுதியாகவிருப்பவர். எத்தனைத் தோல்விகளைக் கண்டபோதிலும், கட்சிக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனத்தின் மூலமாக மீண்டும் பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்து அனைவருக்கும் சிம்மசொப்பனமாக திகழ்பவர். தனியொரு நபராக அதே துணிவுடன் பாராளுமன்றில் உரை நிகழ்த்தி வருகிறார். தனது **பாராளுமன்ற முதல் உரையிலேயே கோட்டாபய ராஜபக்ஷவின் புதிய அரசை சரமாரியாக விமர்சித்தவர். அவரின் அரசியல் அனுபவமும் மேற்கத்தேய நாடுகளுடனான செல்வாக்கும் காய்நகர்த்தல்களும் தற்போதைய அரசுக்குத் தேவைப்படுகிறது.** ஒரு நீண்ட நிகழ்ச்சிநிரலின் பின்னணியில் தான் அவரது திடீர் பாராளுமன்றப் பிரவேசம் அமைந்துள்ளது எனலாம். அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான அவர் ஒரு கூட்டணி தொடர்பிலான காய்நகர்த்தல்களை எதிர்காலத்தில் மேற்கொள்ளக்கூடும். தான் தலைமை ஏற்காதுவிடினும் பிரதமர் பதவியையாவது குறிவைக்க எண்ணியிருக்கலாம். அவர் எதிர்பார்த்ததன் படி அவரை எதிர்த்த அணியினர் இன்று அவரது கட்சியில் இல்லை. இன்று இருப்பவர்கள் அவருக்கு ஆதரவானவர்களும் பாரம்பரிய ஐக்கிய தேசியக் கட்சியினரும் தான்.

தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் மௌனிக்கவைக்கப்பட்டதற்கு ரணில் அவர்களின் தந்திரோபாயங்களும் காய்நகர்த்தல்களும் முக்கிய காரணமாக அமைந்தன என்றால் அது பொய்யாகாது. இந்த நிலையில் தான் இலங்கையின் தற்போதைய அரசில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளது. இலங்கையின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சி கண்டுள்ளது. கொவிட் வைரசின் பரவலால் இலங்கையின் அனைத்துத் துறைகளும் வீழ்ச்சி கண்டதால் இன்று அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குக் கூட டொலர் கையிருப்பில் இல்லாத நிலையில் நாட்டின் விலைவாசி உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதால் நாட்டு மக்கள் அல்லல்படுகின்றனர். அரசின் மீது அதிருப்தியடைந்துள்ளனர். அரசின் செயற்பாடுகள் தொடர்பில் கேள்வியெழுப்புகின்றனர். இராணுவமயமாக்கலை மக்கள் விரும்பவில்லை. இவ்வரசாங்கத்தினால் நாட்டுக்குத் தேவையான விடயங்களைச் செய்ய முடியவில்லை என கோசங்கள் எழுப்பப்பட்டு வருகின்றது. இந்த தருணத்தில் தான் ரணில் அவர்களின் காய்நகர்த்தல்கள் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டனவா என்கிற கேள்வி எழுந்திருக்கின்றது. தனியாக பாராளுமன்றம் வந்தாலும் முன்னர் அவரது கட்சியில் இருந்தவர்கள் ஏராளமானோர் பாராளுமன்றில் இருக்கின்றனர். இந்த நிலையில் அண்மைக் காலமாக ரணில் அவர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இலங்கை நாடவேண்டும் எனவும், இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு பேதமின்றி அனைவரும் இணைந்து செயற்படவேண்டும் என அவரால் வலியுறுத்தப்பட்டு வந்தது. சீன சார்பாக கோட்டாபய ராஜபக்ஷவின் அரசு செயற்பட்டு வருவதால் மேற்கத்தேய நாடுகள் அதிருப்தியடைந்துள்ளன. இந்தியாவே எச்சரித்து வருகிறது. இந்த நிலையில் மேற்கத்தேய நாடுகளின் செல்வாக்கு தற்போது நாடு இருக்கும் சூழலில் தேவைப்படுகிறது. ஐரோப்பிய யூனியனின் உதவி தேவைப்படுகின்றது. மீண்டும் இலங்கையின் சுற்றுலாத்துறை மற்றும் ஏற்றுமதிகளை அதிகரிக்க கட்டாயம் மேற்கத்தேய நாடுகளின் உதவி அரசிற்குத் தேவை என்பது ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்குத் தெரியாமல் இல்லை. இந்த நிலையில் தான் திடீரென அரசில் இருந்து சுசில் பிரேமஜயந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டதுடன், விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சுப் பதவியில் இருந்து நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி கோட்டாபய அவர்கள் நீக்கியுள்ளார். இதன் தொடர்ச்சியாக அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும், இராஜாங்க அமைச்சர்களும் கூட இன்று தமது பதவிகளை இராஜிநாமா செய்து வருகின்றனர். தொடர்ந்தும் அரசின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளது. அதன் உச்சக்கட்டமாக அரசின் பங்காளிக் கட்சிகள் தனியான ஒரு கூட்டினை எதிர்காலத்தில் அமைக்கவிருப்பதாகவும் சுதந்திரக்கட்சி கடும் அதிருப்தியில் உள்ளதால் எதிர்வரும் தேர்தல்களில் மொட்டு சின்னத்தில் போட்டியிடுவதில்லை தனியாக தேர்தலைச் சந்திக்கவிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

11ஆம் பக்கம் பார்க்க...
சசிகரன்

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## மாறியிருக்கும் உலகப் போக்கும் இழுத்தடிக்கப்படும் தமிழருக்கானத் தீர்வுகளும்

தமிழ் மக்கள் விடயத்தில் இலங்கையரசாங்கம் காட்டும் பாரபட்சம் என்பது இன்று நேற்றல்ல. இலங்கையை ஆட்சி செய்ய மாறி மாறி வந்த அரசுகள் தங்களது நலன்களுக்காக தமிழ் மக்களது பிரச்சினைகளை பாவித்ததே தவிர, மேலும் மேலும் தமிழினத்திற்கான இன்னல்களை, பிரச்சினைகளை அதிகரித்ததே தவிர தீர்வுகளை வழுங்கவில்லை. அதாவது அவர்களின் நிகழ்ச்சிநிரல் மாற்றம் பெறவில்லை. தமிழ் மக்கள் பலத்த ஆதரவுடன் கொண்டு வந்த மைத்திரி - ரணில் நல்லாட்சியே தமிழ் மக்களுக்குரிய தீர்வுகளை வழுங்கவில்லை. இழுத்தடித்து ஆட்சியைக் குழப்பினர். தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டங்கள், நிலைமாறுகால நீதிக்கான செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ச்சியாக உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியாக குரல்கள் எழுகின்றபோதிலும் எதிர்பார்த்த மாற்றங்கள் எதுவும் நடக்கவில்லை. வெறுமனே முன்னர் இருந்ததை விட தற்போது வடகிழக்கில் இராணுவ மயமாக்கலும், சிங்களக் குடியேற்றங்களும், விகாரைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. சிங்கள மயமாக்கல் தீவிரம் பெற்றுள்ளது.

இந்த நிலையில் தான் தமிழினம் எதிர்பார்க்கும் அல்லது வலியுறுத்திவரும் ஜெனீவாவையும் கடந்த சர்வதேச விசாரணை என்பது தமிழினத்திற்கு உடனடியாகச் சாத்தியமில்லை என்பது தெளிவான உண்மை. அதற்கான காலங்கள் இன்னமும் தேவைப்படுகின்றது. தற்போதைய அரசாங்கத்தில் தமிழ் மக்கள் சிறு துரும்பினையேனும் எதிர்பார்க்க முடியாது. பதவியியில் இருக்கும் கோட்டாபய தலைமையிலான அரசாங்கம் ஏற்கனவே தமிழ் மக்கள் விடயத்தில் அக்கறைகொள்ளவில்லை. அத்துடன் தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டினை வழிநடத்திச்செல்வதே அரசிற்கு சாவாலான விடயமாக மாறியுள்ளது. நாட்டில் அதிகரித்துள்ள அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடும் விலையுயர்வும் மக்களை வெகுவாகப் பாதித்துள்ளதுடன் மக்களை அதிருப்தியடையவும் செய்துள்ளது.

என்றுமில்லாதவாறு இலங்கையின் பொருளாதாரம் அதளபாதாளம் நோக்கிச் சென்றிருக்கிறது. உற்பத்திகள், ஏற்றுமதிகள், டொலர் தட்டுப்பாடு, சர்வதேச நாடுகளின் கடன்கள் என அனைத்தும் இன்று அரசை கழுத்தைப் பிடித்து நெருக்கியுள்ளது. அத்துடன் ஆளும் கட்சிகளுக்குள் பிரச்சினைகள் எழுந்துள்ளது. ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரம் சிக்கலுக்குள்ளாகியுள்ளது. எதிர்வரும் சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேலாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக பாரியளவிலான வேலைத்திட்டங்களை அனைத்துக் கட்சிகளும் இணக்கமுடன் முன்னெடுக்கவேண்டியதேவைஏற்பட்டுள்ளது. கடன்களை மீள செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் மேலும் கடன்களை பெற்று நாட்டில் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடிக்கு மத்தியில் உலகப் போக்கும் மாற்றமடைந்துள்ளது. ரஸ்ய மற்றும் உக்ரைன் யுத்தமும், சர்வதேச நாடுகளில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களும் பொருளாதார நெருக்கடிகளும் உலகத்தின் செயற்பாடுகளை நிலைகுலையச் செய்துள்ளன. புதிய திட்டங்களுடன் பயணிக்கவேண்டிய நிர்ப்பந்தம் அனைத்து நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ளது. அனைத்து நாடுகளும் இன்று தத்தம் நாடுகளின் வளர்ச்சி பற்றிப் பேசுகின்றன. இன்றைய உலகப் போக்கு முற்றாக மாற்றமடைந்துள்ளதைக் காண்கிறோம். காலங்கள் நீடிக்கின்றபோது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கானத் தீர்வுகள் தொடர்பில் உலக அரங்கில் வலுவாகப் பேசப்படுமா?. இன்றும் ஒற்றுமையில்லாமல் கருத்து முரண்பாடுகளால் பிரிந்து நிற்கும் தமிழ்க் கட்சிகள். இவ்விடயம் குறித்து இன்னும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

181

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்



சில வேளைகளில் சூழ்நிலைக்கேற்ப திரும்பச் சென்று எதிரி எதிர்பாராத இடத்தில் அவனைத் தாக்கலாம். ஆனால் இதற்கும் மேலானவற்றை வாழ்வில் பரீட்சித்துப் பார்ப்பது அர்த்தமற்றதாகும்.

கெரில்லாத் தலைவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களில் (கவ்பாக், பசிம், வெர்சிகோர்) அடிக்கடி எகேர்களுடன் சமரில்ஈடுபட்ட விடயங்கள் விருப்பின்றிச் சுருக்கமாக நினைவுபடுத்தப்படுகின்றன. பின்வருமாறு அவர்கள் அச்சமர்களை வர்ணிக்கின்றனர்.

இரவிலும் பகலிலும் சகல காலநிலைகளிலும் துன்புறுத்தும் வண்ணம் எகேர்கள் இயங்கினார்கள். அவர்களைப் பற்றி ஏற்கனவே தெரிந்திருந்தது. உருமறைப்பு வலையுடன் இருந்த அவர்களை இருளைப் போலக் கண்டுகொள்ள முடியாததுடன் அவர்கள் துன்பத்தைத் தருபவர்களாக வும் பயங்கரமானவர்களாகவும் இருந்தார்கள். காடு முழுவதும் பயங்கரமானதாக இருந்தது. நாசகார வேலைக்காகச்செல்லல்,வேவுபார்க்கச் செல்லல், நகரிலிருந்து வருபவனைச் சந்தித்தல் ஆகியன பிரச்சனைக்குரிய விடயங்களாக மாறின. அங்கே குடியானவன் எவர்மேலும் பதுங்கித் தாக்குவதற்காக இருக்கவில்லை. மாறாகக் குடியானவன் மேல் தாக்குவதற்காகக் காத்திருந்தார்கள். காட்டுக்குள்ளால் சாதாரணமாகச் செல்ல முடியாது. கத்தியால் நீ குத்தப்பட வில்லையென்றால், நிச்சயம் கண்ணிவெடியில் கால் வைப்பாய் என்ற நிலையே இருந்தது. அத்துடன் எங்கிருந்தென்பது தெரியாவண்ணம் ஒலிய முக்கி பொருத்தப்பட்ட சுடுகலனிலிருந்து சூடுகள் வரும். ஆட்கள் காணாமல் போய்விடுவார்கள். எகேர்கள் திறந்த சமரைத் தொடங்குவதில்லை, அவர்களைப் பின்தொடரவும் முடியாது. அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். எங்கே வசிக்கின்றார்கள், என்னஉண்கின்றார்கள்,எப்பொழுது தூ ங்குகின்றார்கள்என்பனபுரியாதவையாக இருந்தன. மிருகங்களைப் போல மோப்பசக்தி கொண்டவர்கள். யாரை வேண்டுமானாலும் அவர்கள் பின்தொடர்ந்து கண்காணித்தார்கள். பார்க்கப்போனால், கெரில்லாத் தந்திரோபாயம் மறுவளமாக மாறியிருந்தது. அதாவது இப்பொழுது இறப்பர்த் தொடுகைத் தந்திரோபாயத்தில் மாத்திரம் அவர்கள் கெரில்லாக்களுடன் செயற்பட்டனர். கெரில்லாக்களின் முகாம்கள் பற்றி எகேர்கள் தருகின்ற அவதானிப்புத் தரவிற்கேற்ப விமானப்படையும் ஆட்டிலறியும் நன்றான முறையில் செயற்பட்டன. பெற்றுக்கொள்ளப்பட்ட வேவுத் தரவுகள் பெரிய தரைப்படையோடு காட்டில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளத் துணைபுரிந்தன. மக்கள் வாழ்விடங்களிலுள்ள இரகசிய கெரில்லாக்கள் அழிக்கப்பட்டனர். தகவல் முற்றுகை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. கெரில்லா முகாம்களுக்கான விநியோகங்கள் தடைப்படுத்தப்பட்டன. சிறப்பணிகள், விமானப்படை, ஆட்டிலறி, எகேர்களின் நகர்வு பற்றாலியன்கள் ஆகியவற்றின் செயற்பாடுகள் ஆயுதந்தரித்த எதிர்ப்பியக்கத்திற்குப் பொறுத்துக்கொள்ள முடியாத சூழ்நிலையைத் தோற்றுவிக்கின்றன.

இப்பொழுது குடியானவர்களைப் பொறுத்தவரையில் சமர் ஒரு களியாட்ட நிகழ்வாகவன்றி, கடினமானதும் மிகக் கொடூரமானதுமான தொழிலாகியது. உணவுப்பொருட்கள், சுருட்டுக்கள், உண்மையான வெற்றி போன்றன இல்லாத போது சமர் மனநிலை குன்றுகின்றது. வீட்டிலிருந்து மிகத் தொலைவில் சமரிட வேண்டியுள்ளது. புரிந்துகொள்ள முடியாத பயவுணர்வு பற்றியது. குடியானவனின் உளவியல் இவை யாவற்றையும் பொறுத்துக்கொள்ளது. ஆவேசக் கிளர்ச்சியலையின் பின் மனவுணர்ச்சியில் உளவியல் உடைவு ஏற்படுகின்றதுடன் படையை விட்டோடும் உணர்வும் தோற்றம் பெறுகின்றது. போராளிகளில் சிலர் முகாமைவிட்டுக் கிராமங்களுக்குள் சென்றுவிடுகின்றனர். அங்கே நடவடிக்கை வழிவகைகளின் மூலம் அவர்கள் கண்டுகொள்ளப்படுகின்றனர். வேளி உதவி வெடிபொருட்கள் உணவுப்பொருட்கள் ஆகியனவின்றி முகாமில் முற்றுகைக்குள்ளான இளைத்துப்போன துண்டாடப்பட்டுள்ள நிலையிலுள்ளவர்கள் நகரக்கடினமான (கண்டுகொள்ள முடியாத) பிரதேசத்திற்குச் செல்கின்றனர். பட்டினியால் இடையிடையே அவர்கள் கிராமங்களில் சகல வகைக் கொள்ளையிலும் ஈடுபடத்தொடங்குகின்றனர்.

கடினமான காலங்களில் கிராமங்களில் சகலதையும் கொள்ளையிடுகின்றனர். இவ்வேளையில் பெண்களுடன் தகாத உறவிலும் ஈடுபட்ட சம்பவங்களும் உள்ளன. ஏதிர்ப்பியக்கத்திற்குத் தருகின்ற ஆதரவைக் குடியானவர்கள் நிறுத்துகின்ற தருணத்தில் இதன் தலைவர்கள் தங்கள் பலத்தைத்தவிர, எந்தவித அரசியல் பலமும் அற்றவர்களாக இருக்கின்றனர். இ.த் தருணமே உடைவுக்கான கட்டமாக விளங்குகின்றது. இச்சூழ்நிலைகளைப் பயன்படுத்தி அரச சிறப்புப்பிரிவுகள் பிரதேச மக்களைக் கொண்டு ஆயுதந்தரித்த தற்காப்புப் படைப்பிரிவுகளை உருவாக்குகின்றன. இது தவிர கொள்ளைகள் சுயாட்சியாளர்களின் அதிகாரம் போன்றவற்றிலிருந்து மக்களை காப்பதற்காகக் கிராமப்புறப் படைமுகாம்களையும் உருவாக்குகின்றனர். இவ்வாறாக 1944 ஆம் ஆண்டு செப்டம்பரில் மேற்கு உக்ரேன் நிலப்பரப்பில் 203 தாக்குதல் படைப்பிரிவுகள் செயற்பட்டன. இவை பாதுகாப்புச்சபையின் இராணுவப் பிரிவினருடன் சேர்ந்து தேசியவாத அமைப்பை (உக்ரேனியத் தேசியவாதிகள் - உக்ரேனியக் கெரில்லா இராணுவம்) ஒழித்துக்கட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டன. அங்கே மக்கள் வாழ்விடங்களில் 2947 தற்காப்பு ஆயுதக் குழுக்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

அவற்றின் வினைத்திறன் பற்றிக் கணிப்பிடுவது கடினமாகும். சோவியத் ரசியாவின் ஏனைய மாகாணங்களில் போர்க்காலத்திலும் போருக்குப் பின்னான காலத்திலும் குற்றாவாளிக் கூட்டங்களும் ஆயுதந்தரித்த படையை விட்டோடிகளும் கொள்ளைகளில் ஈடுபட்டனர். இராணுவ வயதை எட்டாத பயிற்றுவிக்கப்பட்ட இளையவர்கள் காவற்றுறையாலும் பாதுகாப்புச் சபையினராலும் மேற்கொள்ளப்பட்ட மனித வேட்டையிலும் காட்டுத் தேடுதல்களிலும் ஆர்வமுடன் பங்கெடுத்தனர்.

அரசின் அடுத்த கட்ட நடவடிக்கை - பொது மன்னிப்பு வழங்குதலாகும். எதிர்ப்பு இயக்கத்தில் படையை விட்டோடும் பண்பு பாரியளவில் காணப்படுகின்றது. (1944 - 1953 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட பொது மன்னிப்பின் போது உக்ரேனியத் தேசியவாதிகள் - உக்ரேனியக் கெரில்லா இராணுவப் போராளிகள் 76 ஆயிரம் பேர் சுயவிருப்பில் சரணடைந்தனர். இதன்போது தண்டிக்கப்பட வேண்டியவர்களுக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டது). எது எஞ்சியுள்ளதோ அதனை எதிர்ப்பியக்கம் என அழைப்பது பொருத்தமற்றதாகும். சலித்துப்போன கொள்கைகளைப் பற்றிக் கொண்டிருக்கின்ற தலைவர்களே எஞ்சியிருக்கின்றார்கள்.

தொடர்வான்....



# தமிழினப் படுகொலையும், இன்றைய அரசியலும்

மூவின மக்களும் வாழும் இலங்கைத் திருநாடு ஆசியாவில் அதிசயமாகப் பார்க்கப்படுகின்றது. ஏராளமான வளங்களைத் தன்னகத்தே கொண்டு இப்பூமிப் பந்தில் இயற்கை எழிலுடன் மிளிர்கின்றது. சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு நாடாகவும், வடகிழக்கினைத் தாயகமாகக் கொண்டு தமிழ் மக்களும் இவர்களுடன் இணைந்து தமிழ் மொழியினைப் பேசுகின்ற முஸ்லீம் மக்களும் சிறுபான்மை மக்களாக இணைந்து வாழ்கின்றனர். சிங்கள தமிழ் முஸ்லீம் என்கிற மூவின மக்களும் தங்கள் தங்களுக்கென தனித்துவமாக சமயம், கலை, கலாச்சாரம், பாரம்பரியம், பண்பாடு, அரசியல், சமூகச் செயற்பாடுகள், வாழ்க்கை முறை என வாழ்ந்துவரும் இச்சூழலில், இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு இன்றுவரையும் இலங்கையின் அரசியலில் பாரிய பிரச்சினைகள், பேசித் தீர்க்கப்படவேண்டிய மக்களது பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் தலைமுறை தலைமுறையாக நீளும் இழுத்தடிப்புக்கள், பௌத்த மேலாதிக்கச் சிந்தனைகள், இன நல்லிணக்கத்திற்கு ஜனநாயகத்திற்கு முரணான செயற்பாடுகள், ஊழல், இன, மத, மொழி ரீதியான குழப்பங்கள், இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வில் ஏற்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட குளறுபடிகள் என ஆசியாவின் அதிசயமான இலங்கையின் மறுபக்கம் மிக மோசமாக அதளபாதாளம் நோக்கிப் பயணித்துக்கொண்டே போகிறது.

இந்த சுதந்திரம் பெற்ற 70 வருட காலத்தில் இலங்கைத் தமிழர்களாகிய நாம் பல கசப்பான சொல்லக்கூட வாய் கூசுகின்ற பல சம்பவங்களைக் கண்டவர்கள். குறிப்பாக தமிழினம் அன்றிலிருந்து இன்றுவரை பௌத்த சிங்கள ஆட்சியாளர்களால் மாறி மாறி வரும் அரசுகளுக்கேற்ப நெருக்கடிகளைச் சந்தித்தே வருகிறது. கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் அஹிம்சை மற்றும் ஆயுதப் போர் கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்தது. தந்தை செல்வா காலத்தில் தமிழினம் சொல்லொனாத் துன்பங்களைச் சந்தித்தது. இந்நிலை பின்னரான காலங்களில் உருமாறி ஆயுதங்களுடன் தமிழினம் வீதிகளில் அலைந்தும், மறைந்தும் இலங்கை அரசின் திட்டமிட்ட அடக்குமுறைகளுக்கு எதிராக, தமது உரிமைகளைக் கோரியே தமிழ்த் தரப்பினர் போராடினர். மாறி மாறி இலங்கையை ஆட்சிசெய்த அரச தலைவர்களின் சிந்தனைகளாலும் செயற்பாடுகளாலும் தான் வடகிழக்கினைத் தாயகமாகக் கொண்டுள்ள தமிழ் மக்கள் அஹிம்சையை விடுத்துப் பின்னர் ஆயுதம் ஏந்தும் நிலைக்கு இளைஞர் மற்றும் யுவதிகள் தள்ளப்பட்டனர். இந்த நெருக்குவாரங்களுக்கு மத்தியில் தான் இலங்கையில் தமிழினம் மீதான யுத்தத்தை இலங்கை அரசு முன்னெடுத்தது. தமிழ்த் தரப்பின் சார்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் இறுதிவரை போராட்டங்களை முன்னெடுத்தனர். ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், ரெலோ, புளொட் என பல இயக்கக் கட்சிகள் அப்போது ஒரே நோக்கத்துடன் தான் தமிழினத்திற்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கோடு போராட்டங்களை முன்னெடுத்தபோதிலும் அப்போதைய இலங்கையின் அரசியல் சூழ்நிலை பல தமிழ்க் குழுக்களைப் பிரித்தது. இந்தியாவுடன் செயற்பட வைத்தது. இலங்கை அரசுடன் இணைந்து மறைமுகமாகவும் செயற்பட வைத்தது. ஒரு பக்கம் இலங்கைக்கு ஆதரவாக இருந்த அப்போதைய இந்திய அரசு, பின்னாளில் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களையும் பயிற்சிகளையும் வழங்கி அவர்களை வளர்த்தும் விட்டது. இவையெல்லாம் அப்போதைய சூழலுக்கு அவர்களுக்குத் தேவைப்பட்டது.

இன்றும் இது ஒரு பௌத்த நாடு. இங்கு பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழவேண்டும். இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் விகாரைகள் நிர்மாணிக்கப்பட வேண்டும். தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களின் வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்படவேண்டும். நிலங்கள் கையகப்படுத்தப்படவேண்டும் என்கிற போர்வையில் பௌத்த மேலாதிக்கச் சிந்தனையில் செயற்படுபவர்கள் இல்லாமலில்லை. இந்த ஒன்றுக்கும் உதவாத சிந்தனைதான் இந்த நாட்டில் தமிழர்களை வகைதொகையின்றி கொத்துக்கொத்தாகக் கொன்றுபோட்டது. ஒரு காலத்தில் பார்க்கும் இடமெல்லாம் தமிழர்களை விரட்டி விரட்டி கொலைசெய்த சம்பவங்கள் வரலாறாக பதிவாகியிருக்கிறது. கறுப்பு ஜூலையில் எத்தனை தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். ஜே.ஆரால் தற்காலிகமாக கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் என்கிற ஒன்றால் எத்தனை அப்பாவித் தமிழ் இளையவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டார்கள். விசாரணைகள் என்கிற போர்வையில் வருடக்கணக்கில் சிறைகளில் வாடுகின்றார்கள். எத்தனை பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். காணாமல் ஆக்கப்பட்டார்கள். சுமார் 200க்கும் மேற்பட்ட தமிழர் பிரதேசங்களில் தமிழர்கள் சிங்களவர்களாலும் அவர்களின் கைக்கூலிகளாலும் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் ஆதாரமாக இருக்கிறது. தமிழர்கள் தொடர்ச்சியாகப் பல உயிர்களைப் பலி கொடுத்தவர்கள். பலர் என்ன ஆனார்கள் என இன்றும் தேடிக்கொண்டிருக்கிறோம். மனித உரிமை மீறல்களைச் சந்தித்திருக்கிறோம். இனப்படுகொலைக்கான நீதி தொடர்பில் இன்றும் தமிழினம் சர்வதேச விசாரணையைக் கோரி வீதிகளில் போராடுகிறது.

இறுதியாக சர்வதேச நாடுகளின் உதவியுடன் இலங்கையில் அரங்கேற்றப்பட்ட ஈழப்போரில் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களின் எண்ணிக்கையைக் கூட சரியாகக் கணக்கிட்டுக் கூற முடியாத துர்ப்பாக்கிய நிலையில் தமிழினம் இன்று நிற்கிறது. யாரிடம் சரியான தரவுகள் இருக்கிறது என்றால் கேள்விக்குறிதான்.

வெளிப்படுகிறது. அவ்வளவுதான். கண்ணைமூடிக்கொண்டு தமிழ் மக்கள் கொலை செய்யப்படுகின்றபோதெல்லாம் கைகட்டிப் பார்த்துக்கொண்டு உதவிகளை இலங்கையரசிற்கு வழங்கிக்கொண்டிருந்த சர்வதேசம் தான் இன்று தமிழ் மக்களுக்கான நீதி குறித்து அறிக்கைகளை விடுகின்றது. ஐ.நாவில் குரல்கொடுக்கின்றோம் என்கிற போர்வையில், தமிழர்களை வடகிழக்கின் நிலங்களை இலங்கை அரசுடன் இணைந்து குறிவைக்கின்றது. இலங்கைக்கு ஆயுத உதவிகளை வழங்கிய சர்வதேச நாடுகளால் இன்று பதில் கூற முடியாது. தமிழ் மக்களுக்கான நீதியைக் கொடுக்க முடியாது. இலங்கைக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது. அன்றிருந்த சர்வதேச நாடுகளின் ஆட்சியாளர்கள் மாத்திரம் தான் இல்லையே தவிர, நிகழ்ச்சி நிரல்கள் இன்னமும் மாற்றமடையவில்லை.

முன்னர் இருந்த நிகழ்ச்சிநிரலை விட தற்போதைய நிகழ்ச்சி நிரல் இன்னமும் கனதியானது. சர்வதேச நாடுகள் தங்களது நலன்களையே பார்க்கின்றன. தங்களுக்கு தமிழர்களின் பிரச்சினையால் இலங்கையில் என்ன இலாபம் வரும் என்பதையே குறிவைத்துச் செயற்படுகின்றன. ஐ.நாவில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் கதைப்பது எல்லாவற்றையும் தத்தம் நாட்டின் அரசின் ஊடாக நடைமுறைப்படுத்தும் வழக்கம் இல்லை. ஐ.நா சபையால் அந்தளவுக்கு நாடுகளின் அரசுகளைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் இல்லை வெறுமனே பொருளாதாரத் தடைகளை விதிக்கலாம் அவ்வளவுதான். அறிக்கைகளை வெளியிடலாம் அவ்வளவுதான். ஐ.நாவின் சரத்துக்களை உறுப்பு நாடுகள் செயற்படுத்துகின்றனவா என்றால் கேள்விக்குறிதான்.

இன்றைய இலங்கையை அன்றே சர்வதேச நாடுகள் தத்தமது தேவைகளுக்கேற்ப சிக்கவைத்து பயன்படுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே இன்றைய இலங்கையில் பூகோள ரீதியான அரசியல் சிக்கலை கண்கூடாகக் காணக்கூடியதாகவுள்ளது. எல்லாவற்றையும் விட சீனாவின் இன்றைய பொருளாதார வளர்ச்சி மேற்கத்தேய நாடுகளைக் கூட அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. சர்வதேச சந்தையில் சீனாவினது உற்பத்திகள் நிறைந்துள்ளது. இன்று சீனாவின் ஆதிக்கத்திற்குட்பட்டதாக இலங்கை முற்றாக மாறியுள்ளதாகவே அரசியல்வாதிகள், அரசியல் அவதானிகள் கூறிவருகின்றனர். அமெரிக்காவும், இந்தியாவும் சீனாவுக்கு எதிராக இலங்கையில் கால்பதித்து, உதவிகளை செய்து வருகின்றன. வளங்களைக் குறிவைத்து செயற்படுகின்றன. இதுவரை இலங்கையை ஆட்சிசெய்த ஜனாதிபதிகளால் இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கான உரிமைகளை, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கானத் தீர்வினை, அதிகாரப் பரவலாக்கலை வழங்க முடியவில்லை மாறாக அடக்கியாளும் பௌத்த சிந்தனையால் தான் இனப்படுகொலையை

மறைந்த முன்னாள் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் அவர்கள் சுமார் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவலை பகிரங்கமாகக் கூறினார். பாரியளவில் படைகளைத் திரட்டி ஆயுதங்களை கடன் வாங்கி இலங்கையரசினால் விடுதலைப்புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்டது மாத்திரமின்றி தமிழர்களின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான போர் மௌனிக்கப்பட்டது. ஏற்கனவே வரலாறு நெடுகிலும் இலங்கை அரசுகளினால் பாரிய இன்னல்களை, அத்துமீறல்களை, அடாவடிகளை, இனவழிப்புக்களைச் சந்தித்தவர்கள் தமிழர்களாகிய நாம். இன்றும் இவ் செயற்பாடுகள் அப்படியே தொடர்கின்றன. அரச நிகழ்ச்சிநிரல் இன்றும் மாற்றம் பெறவில்லை. இன்னமும் இனவாதத்தீ புகைந்துகொண்டேயிருக்கிறது. அது முன்னர் இருந்ததை விட தற்போது மறைந்திருக்கிறது. அவ்வப்போது தமிழினம் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இலங்கையரசின் இந்தப்போக்குகள் யுத்தம் முடிவடைந்த சுமார் பத்து வருடங்களுக்கு மேலான இந்தக் காலப்பகுதியிலும் மாறவில்லை. எதிர்பார்த்த பெருமளவிலான மாற்றங்களைக் காணமுடியவில்லை. ஆட்சியாளர்கள் மாறி மாறி வருகின்றபோதிலும் வடகிழக்கு வாழ் தமிழ் மக்களது வாழ்வு இன்னமும் வளம் பெறவில்லை. அரசியலில், நீதித்துறையில், கல்வியில், அபிவிருத்தியில், விளையாட்டுத்துறையில் வடகிழக்கு இன்னமும் பின்தங்கிய நிலையில் தான் காணப்படுகின்றது. தெற்கினை விட பாரபட்சம் காட்டப்படுகின்றது. இன்றும் வீதிகளில் தமது உறவுகளைத் தேடி என்ன ஆனார்கள் எனத் தெரியாமல் கடந்த பல வருடங்களாக தாய்மார்கள் வீதிகளில் போராடி வருகின்றனர். மாறி மாறி ஜெனீவா மாநாடு நடைபெற்று முடிகிறது. இலங்கையில் ஆட்சி மாறுகிறது. சர்வதேச நாடுகளின் அரசியல் போக்கு மாற்றம் பெறுகிறது. தொழில்நுட்ப பொருளாதார ரீதியில் நாடுகளுக்கிடையிலான போட்டி அதிகரித்துள்ளது. அதனை நோக்கியே நாடுகள் அனைத்தும் நகர்கின்றன. தங்களுக்கு நலன்கள் இருக்கிறதா என்பதையே சர்வதேச நாடுகள் பார்க்கின்றன. தங்களது நாட்டை வளப்படுத்துவதற்கான குறிக்கோளுடன் நாடுகள் பயணிக்கின்றன. இலங்கையின் பாதுகாப்பான துறைமுகங்களும் கனிய வளங்களும் சர்வதேச நாடுகளுக்குத் தேவைப்படுகின்றன. சீனாவின் முதலீடுகள் இன்று இலங்கையில் அதிகரித்திருக்கிறது. வளங்கள் சீனாவுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தியாவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவுக்கு வழங்கப்படுகிறது. தமிழர்கள் விடயத்தில் பிரச்சினைகளுக்கானத் தீர்வுகளை இலங்கை அரசு ஒருபோதும் வழங்காது. குற்றமிழைத்த தரப்பினரால் தீர்வுகள் கிடைக்க வாய்ப்பு இல்லை. ஆட்சியாளர்களும் பாதுகாப்புத் தரப்பினரும் சிறைகளில் வாடத் தயாரில்லை.

இதனால் தான் இன்று தமிழினம் சர்வதேச விசாரணையைக் கோருகிறது மாறாக இலங்கையரசு உள்ளக விசாரணை என்கிற போர்வையில் ஆணைக்குழுக்களை அமைத்து கடந்த காலங்களில் ஏமாற்றுவேலைகளைப் பார்த்தது உங்களுக்கு நினைவிருக்கும். ஆங்காங்கு விசாரணைகளுக்காக தமிழர்கள் அழைக்கப்பட்டு பின்னர் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்காக சென்றவர்கள் விசாரிக்கப்பட்டதும் கடந்த காலச் சம்பவங்கள். ஆனால் இன்று இவையணைத்தும் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இவ் ஆணைக்குழுக்கள் சமர்ப்பித்த அறிக்கைகள் என்ன ஆகின. அதனது உண்மைத்தன்மைகள் என்ன?. விசாரிக்கப்பட்டவர்கள் வழங்கிய வாக்குமூலங்களுக்கு என்னவானது என்பதெல்லாம் இலங்கையரசின் செயற்பாடுகள் கண்துடைப்பு என்பதை இன்னமும் தமிழர்கள் புரிந்துகொள்ளாமலில்லை. சர்வதேச நாடுகளைச் சமாளிக்க, ஜெனீவா மனித உரிமைகள் பேரவையினைச் சமாளிக்க நீங்கள் திடீரென மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து தமிழ் மக்களுக்குப் போதிய தெளிவு இருக்கின்றது என்பதை நினைவிற் கொள்ளுங்கள். இலங்கையின் இந்த இழுத்தடிப்பு அரசியல் செயற்பாடுகளுக்கு மத்தியில் தான், தமிழினம் இந்த நாட்டில் எதிர்கொண்ட படுகொலைகளுக்கான நீதி தொடர்பில் இன்று பதவியில் இருக்கும் கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசு நீதி வழங்கும் என எக்காலத்திலும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் ஆட்சியில் இருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களும் அவரது ஆட்சியில் பாதுகாப்புச் செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷ இருவரும் தான்

11ஆம் பக்கம் பார்க்க...

நெற்றிபொறியன்

# மகளிர் தினமும்,பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகளும்

உலகளாவிய ரீதியில் மார்ச் 8ஆம் திகதி மகளிர் தினம் கொண்டாடப்பட்டுவருகின்றது. குழந்தையை பத்து மாதம் கருவிலே சுமந்து சொல்லொன்ன துன்பங்களை அனுபவித்து அக்குழந்தையை உலகுக்கு கொண்டுவந்து அதனை வளர்த்தெடுத்து சமூகத்தில் நல்லவனாகவோ அல்லது கெட்டவனாகவோ இருந்தாலும் என்றுமே அது தன்பிள்ளை என போற்றி வளர்க்கும் பொறுமைக்கெல்லாம் பூமாதேவிக்கு ஒப்பிடப்படும் பெண்களுக்கான தினமாக கொண்டாடப்பட்டுவருகின்றது. இலங்கை சுதந்திரத்துக்கு முன்னரான காலப்பகுதிகளில் இருந்து சுதந்திரத்தின் பின்னரான 1970 கள் வரை பெண்ணடிமைத்தனம் தலைதூக்கி இருந்த காலம். பெண்கள் அடுப்பங்கரையை விட்டு வெளியேற முடியாத காலம். வெளி இடங்களுக்கு பெண்கள் செல்லமுடியாத காலம் கணவனுக்கு அடிமையான காலம் அது மட்டுமன்றி கல்வியை கூட 12 வயதுக்கு மேல் தொடரமுடியாத காலமாக அக்காலகட்டம் இருந்தது. இதை விட மிகக் கொடுமையாக இருந்த ஓர் விடயம் அக்காலகட்டங்களில் மிக மிக இளவயது திருமணம். 12 வயதில் பூப்பெய்தியவுடன் திருமணம் முடித்துக்கொடுக்கப்படும். இவ் வழக்கமானது இலங்கையின் வடகிழக்கு பிரதேசங்களிலும் காணப்பட்டது. மற்றும் மலையகங்களிலும் இவ் அவலம் தொடர்ந்தது. அக்காலகட்டங்களில் கண்டி இராச்சிய காலப்பகுதிகளில் அரசனின் பிரதானிகள் மற்றும் ஊர்த் தலைவர்கள். பஞ்சாயத்து தலைவர்களின் அடிமைகளாகவும் அவர்களது தேவைகளுக்காகவும் பல கிராமத்து பெண்கள் அடிமைகளாக வைக்கப்பட்டிருந்த நிலை காணப்பட்டது. அத்துடன் ஜாதி வேற்றுமை மிக மோசமாக அக் காலகட்டங்களில் பார்க்கப்பட்டது.




பெண் சமுதாயம் காணப்பட்டது. பெண் அச்சுறுத்தல்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் இளவயது திருமணங்கள் என அனைத்தும் இல்லாது ஒழிக்கப்பட்டதுடன் போர்களில் பல சாதனைகள் படைக்கப்பட்டன. பல வீர வரலாறுகள் படைக்கப்பட்டன. 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழினத்துக்கான உரிமைப்போர் மூழ்கடிக்கப்பட்டது. அந்த கோர யுத்தத்தில் பல்லாயிரக் கணக்கானோர் மாண்டுபோயினர். பலர் காணாமல் போயினர், பலர் அங்கவீனர்கள் ஆயினர். இலங்கையில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று

துன்புறுத்தலுக்கு ஆளாகி வருகின்றனர். அத்துடன் தொழில் நிறுவனங்களில், பாடசாலைகளில், தனியார் கல்வி நிலையங்களில், வீடுகளில் என அனைத்து இடங்களிலும் பெண் பிள்ளைகள் மோசமாக நடத்தப்படுகின்றனர். பெண் குழந்தைகளைக் கூட இந்த ஆண் சமுதாயம் சீரழித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு போதைப்பொருள் பாவனை அதிகரிப்பே முக்கிய காரணமாக பார்க்கப்படுகின்றது. போதைப் பொருள் பாவனையால் பல குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்பதுடன் இப் பாவனையின் விரக்தியால் பல குடும்ப

சீரழிக்கப்பட்டுவருகின்றதை அவதானிக்க முடிகின்றது. அண்மைக்காலமாக 15 வயது முதல் 25 வயதிற்கு உட்பட்ட பல இளம் மாணவிகள் யுவதிகள் தற்கொலை செய்வதை அவதானிக்க முடிகின்றது. பெண் பிள்ளைகள் தமது பிரச்சனைகளை தமது பெற்றோருக்கு தெரியப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. தற்காலத்து பெற்றோர் பெண் பிள்ளைகளுடனும் சரி ஆண் பிள்ளைகளுடனும் சரி அவர்களும் நேரத்தை செலவிடுவது இல்லை. நவீன தொழில்நுட்ப கைபேசிகளுடன் தமது நேரத்தை செலவழிக்கும் பெற்றோர் தமது பிள்ளைகளின் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்காமல் அவர்களுடன் நேரத்தை செலவிடாமல் இருப்பதின் எதிர் தாக்கமே இவ்வாறான தற்கொலை முடிவுகள் 2022 மார்ச் 8 ஆம் திகதி மகளிர் தினம் அன்று பதுளை பகுதியில் 18 வயது நிரம்பிய உயர் தர வகுப்பு மாணவி ஒருவர் கோடரியில் வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். படுகொலை செய்த ஆண் 35 வயதுடையவர் ,வரது காதலுக்கு அம் மாணவி செவி சாய்க்கவில்லை என்பதால் இப்படுகொலை அரங்கேறியதாக கூறப்படுகின்றது. அம் மாணவியின் தாய் தகப்பன் தோட்டத்தொழிலாளர்கள் தமது பிள்ளையை படிப்பித்து நல்ல நிலைக்கு கொண்டுவர வேண்டும் என போராடிவரும் நிலையில் இவ்வாறான ஓர் துயரச் சம்பவம் இடம்பெற்றதனால் அப் பிரதேசம் முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. 30 வருட கால யுத்தத்தில் பல பாடசாலை மாணவிகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதுடன் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதிகளில் இது மிக மோசமாக அதிகரித்து காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் 1995 களின் பின்னர் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் பாடசாலை

குறிப்பாக இவ்விடயத்தில் இன்று வரை யாழ்ப்பாணத்தில் ஜாதிவெறி மிக மோசமாக காணப்படுகின்றது. கீழ் ஜாதி பெண்களை அடிமைகளாகவும் பாலியல் ரீதியாகவும் துன்புறுத்துவது மிக மோசமாக அரங்கேறிய காலம். 1970 களின் பின்னர் இலங்கையின் வட கிழக்கு பகுதிகளில் தமிழர்களின் உரிமைக்கான போராட்டம் ஆரம்பமானது இப்போராட்டத்தில் பல வடகிழக்கு இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராட தொடங்கினார்கள். இப்போராட்டங்களில் பல ஆயுதக் குழுக்கள் உதயமாகின. இதில் தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) போன்ற அமையப்புக்கள் உருவாகி போராட புறப்பட்டனர். இக்காலகட்டங்களில் அடுப்பங்கரை அடிமைகளாக அடுப்பூதிக் கொண்டிருந்த மாதர்களை இவ் அமைப்புக்கள் உள்வாங்கத் தொடங்கின. இதில் முதலில் பெண்களை தமது அமைப்பில் உள்வாங்கியது ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியும் தமிழீழ விடுதலைப் இயக்கமும் தான். அவ் அமைப்புக்களே முதலில் பெண்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தனர். இதற்கு யாழ்ப்பாணத்தில் பலத்த எதிர்ப்புக்கள் கிளப்பின. அடுப்பங்கரையில் அடிமைகளாக இருந்த பெண்கள் ஜீன்ஸ் சேட் அணிந்து கையில் ஆயுதங்களுடன் வீதிகளில் உலா வருவதை அக்காலத்தில் மக்கள் ஆச்சரியத்துடன் கண்ணோக்கினர். ஆண்களுக்கு சரிசமமாக பெண்கள் வாகனங்களை இயக்குவதை பார்த்து ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றுவிட்டனர்.

அக்காலகட்டங்களில் துவிச்சக்கரவண்டியை கூட ஓட்டுவதற்கு அனுமதி இல்லாத காலம் கோவிலுக்கு செல்வது என்றால் கூட நடந்து சென்று வரவேண்டும் அத்துடன் குனிந்த தலை நிமிரக் கூடாது என்ற நிலையில் இவ்வாறு கையில் ஆயுதங்களுடனும் வாகனங்களை மிகலாவகமாக இயக்குவதை கண்டு மக்கள் ஆச்சரியத்தில் மூழ்கி போயினர். 1980 களின் பின்னர் விடுதலைப்புலிகள் அமைப்பும் பெண்களை தமது இயக்கத்துக்கு இணைத்துக் கொண்டனர். அதன் பின்னர் பெண்ணடிமைத்தனம் என்ற வாசகம் அகராதியில் இருந்து அகற்றப்பட்டது. பாரதிகண்ட புதுமைப் பெண்களாக

வந்த இன உரிமைப் போரில் தமிழ் சிங்கள முஸ்லிம் சமூகம் பெரும்பாதிப்பை சந்தித்தது. குறிப்பாக தமிழ் சிங்கள பெண்கள் பல்லாயிரக்கணக்கானோர் விதவைகளாயினர் பல்லாயிரக்கணக்கான பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உருவாகின. இவ்வாறு பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பல பிரச்சனைகள் மற்றும் வாழ்வாதாரத்துக்கான போராட்டங்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல் என பல்வேறு பிரச்சனைகளை சந்தித்துவருகின்றனர். 2009 வரை வடகிழக்கு பகுதிகளில் கைத் தொலைபேசியின் பாவனை, கணணி பாவனைகள் மிகக்குறைவாக இருந்தது. தற்பொழுது இது மிக அதிகளவில் பாவனைக்குட்படுத்தப்படுவதால் இன்று இளம் சமுதாயத்தில் குறிப்பாக இளவயது பெண் பிள்ளைகள் மிக மோசமாக பாலியல் ரீதியான

பெண்கள் அடித்து துன்புறுத்தப்படுவதுடன் மிக மோசமாகபாலியல்ரீதியானதுன்புறுத்தலுக்கும் ஆளாகின்றனர். இதனால் பல பெண்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர். தாமும் உயிரை மாய்ப்பதுடன் தமது பிள்ளைகளையும் அநாதரவாக விட்டுவிடுகின்றனர். இந்நிலையில் பல குடும்பங்களில் பெண்கள் தமது கணவரை இழந்திருந்தாலோ அல்லது கணவரை பிரிந்திருந்தாலோ மறுமணம் செய்கின்றனர். இவ்வாறு இரண்டாம் தாரமாக மணம்முடித்த அந்த கணவரால் முதல் தாரத்து பெண்பிள்ளைகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுவதுடன் இதற்கு துணையாக அந்த தாய் உள்ளமையும் மிக வருத்தத்திற்கு உரிய விடயமாகும். இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் காதலனாலும் அவனது நண்பர்களாலும் பெண் பிள்ளைகள்



மாணவி கிருஸ்சாந்தி இராணுவத்தினரால் கூட்டு பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவமும் யுத்தத்தின் பின்னர் யாழ் புங்குடுதீவில் பாடசாலை மாணவி வித்தியா கூட்டு பாலியல் வல்லுருக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இது இரண்டுக்குமான நீதி நீதிபதி இளஞ்செழியன் அவர்களால் நிலை நிறுத்தப்பட்டது. குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதனை விட பல சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் வெளிச்சத்துக்கு வராமல் மறைக்கப்பட்டுள்ளது. 2019 க்கு பின்னர் கொவிட் வைரஸ் தொற்றால் நாடுமுடக்கப்பட்ட சூழ்நிலையில் இலங்கையின் தென் பகுதிகளில் பல குடும்ப பெண்கள் குடும்ப வன்முறைக்கு ஆளான சம்பவங்கள் அதிகளவில் பதிவாகி அதிர்வலையை ஏற்படுத்தியது. நாளொன்றுக்கு 5 க்கு மேற்பட்ட பெண் குடும்பத் தலைவர்கள் தாக்கப்பட்டு வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

உலகில் பெண்கள் தமது அடிமைச் சங்கிலிகளை உடைத்து அடிமை வாழ்க்கையில் இருந்து வெளியேறி பல் துறைகளில் ஆண்களுக்கு நிகராக பிரகாசித்துவருகின்றனர். மூட நம்பிக்கைகள் மூடபழக்கவழக்கங்கள் அனைத்திலும் இருந்து பெண் சமுதாயம் வெளியேறியுள்ள நிலையில் ஆணாதிக்க சமுதாயம் பெண்களை போதைப் பொருளாக பார்க்கும் மனச் சிந்தனை அகலும் வரை பெண்களுக்கான வன்முறைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும் பெண்ணடிமைவாத சிந்தனை சாதியமுறை சிந்தனை பாலியல் பொருளாக பார்க்கப்படும் சிந்தனை போதைப் பொருள் பாவனை சிந்தனை என்பன ஆண் சமுதாயத்தில் இருந்து முற்றாக களையப்பட்டால் அத் தினமே மகளிர்களுக்கான ஓர் உண்ணதமான தினமாக போற்றப்படும் பெண் சமுதாயம் இந்நிலையை மாற்ற போராட வேண்டிவரும் பெண்கள் அமைப்புக்கள் அனைத்தும் இது சார்பு நிலையில் உறுதியாக இருந்து செயல்படுவதுடன் பெண்ணியம் காக்க அனைவரும் ஒன்றுபட்டு செயல்படுவதே இக் கோர காலத்தின் மிக அத்தியாவசிய விடயமாகும். விழிப்படையுமா ஆண் சமூகம்.

**தாயகத்தான்**

# உலக நாடுகளின் உதைபந்தாட்டக் களமாக மாறியுள்ள உக்ரைன்

உலகின் இன்றைய பேசுபொருளாக மாறியுள்ள விவகாரம் தான் ரஸ்யா -உக்ரைன் யுத்தம். கடந்த 24 பெப்ரவரி 2022 அன்று அதிகாலையில் உக்ரைன் மீது ரஸ்யா போரை ஆரம்பித்தது. உக்ரைன் நாட்டின் கிழக்கு, வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் உள்ள இராணுவ நிலைகள் மீது ரஸ்யப் படைகள் தாக்கியது. மேலும் உக்ரைனின் தலைநகர் கீவ் மற்றும் கார்கீவ் நகரங்களில் ரஸ்யப் படைகள் தரையிறங்கி தாக்கியது. எனினும் தற்போது இவ் யுத்தம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. உக்ரைனிலிருந்து மக்களது வெளியேற்றத்திற்கு உதவியாக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பல்வேறு நாடுகள் ரஸ்யாவுக்கு கண்டனம் தெரிவித்து ரஸ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தாலும், ரஸ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான போர் இன்னும் முடிவுக்கு வராமலே இருக்கிறது. போர் நிறுத்துவது தொடர்பாக பெலாரஸில் மூன்று முறை உக்ரைனும், ரஸ்யாவும் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தியும் இரு தரப்பிலிருந்து சுமுகமான முடிவுகள் ஏதும் எட்டப்படவில்லை. இந்த நிலையில், நான்காவது முறையாக உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா மற்றும் ரஸ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் லாவ்ரோவ் ஆகியோர் துருக்கியில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பேச்சுவார்த்தைக்குப் பின்னர் செய்தியாளர்களிடத்தில் பேசிய உக்ரைன் வெளியுறவுத்துறை டிமிட்ரோ குலேபா, போர் நிறுத்தம் தொடர்பாக நாங்கள் பேசினோம். ஆனால், அதில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்த விவகாரத்தில், மற்ற முடிவெடுப்பாளர்கள் ரஸ்யாவில் இருப்பதாகத் தெரிகிறது. உக்ரைன் சரணடையவில்லை, சரணடையாது என்பதை நான் மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருக்கிறோம். அதற்கான முடிவுகளைத் தேடுகிறோம். விவாதம் அல்லது தீர்வுகளைத் தேடும் பட்சத்தில், லாவ்ரோவை மீண்டும் இதேபோல் சந்திக்க நாங்கள் தயார் எனக் கூறியுள்ளார். இதற்கிடையில் ரஸ்யா உக்ரைனில் தொடர்ந்தும் ஆங்காங்கு தாக்குதல்களை நடத்தி வருவதாகவும், உக்ரைனின் ஐந்து நகரங்களில் மாத்திரம் போர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அங்கு ரஸ்யாவின் இராணுவத்தினர் தொடர்ந்தும் முன்னேறி வருவதாகவும் செய்திகள் வெளியாகியவண்ணம் இருக்கின்றன. நீண்ட வரிசையில் ரஸ்ய இராணுவத்தினர் அங்கு நிலைகொண்டிருப்பதாகவும் அறிய முடிகின்றது.

சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்துசென்ற உக்ரைன், தற்போது மேற்கத்தேய நாடுகளின் செல்வாக்கு மிக்க நாடாக மாறியுள்ளது அல்லது மாற்றப்பட்டுள்ளது. இதனைத்தான் மேற்கத்தேய நாடுகள் எதிர்பார்க்கின்றன. வறுமையைப் பயன்படுத்தி உதவிகளைச் செய்ய மேற்கத்தேய நாடுகள் தவம் கிடக்கின்றன. அந்நாட்டின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் செயற்பாடுகள் ரஸ்யாவை ஆத்திரமடையச் செய்துள்ளன. மீண்டும் **ரஸ்யா சோவியத் ஒன்றியத்தை மீளமைப்பது குறித்து சிந்தித்து வந்த சூழலில், உக்ரைன் ஜனாதிபதி நேட்டோ அமைப்பில் இணைவதையும், ஐரோப்பிய யூனியனில் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்ததையடுத்தே ரஸ்ய அதிபரினால் உக்ரைன் மீதான போர் ஆரம்பமாகியது.** எப்படியாவது இதனைத் தடுக்கவேண்டும் என ரஸ்யா விரும்புகின்றது. அதன் இறுதிக்கட்டம் தான் போரின் மூலமாகவாவது உக்ரைனைக் கைப்பற்றத் துடிக்கின்றது. உக்ரைனின் இந்த நிலைப்பாடானது ரஸ்யாவுக்கு தலையிடியைக் கொடுக்கும். அதாவது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும், தனது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல், அமெரிக்காவின் செல்வாக்கு உக்ரைனில் அதிகரிக்கும், உக்ரைன் நாட்டு வளங்கள் பறிபோகும். அத்துடன் சோவியத் ஒன்றியத்தில் முன்னர் அங்கம் வகித்த ஏனைய நாடுகள் ரஸ்யாவுக்கு ஆதரவாக இருக்க உக்ரைன் மாத்திரம் மேற்கத்தேய நாடுகளின் செல்வாக்கினைப் பெற்று பிரிந்துபோவது என்பது அப்பிராந்தியத்தில் ஆபத்தானதாக மாறும் என்பதை உணர்ந்த ரஸ்யா இன்று அமெரிக்காவுக்கு எதிராக, ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராக செயற்பட ஆரம்பித்துள்ளது. யார் இந்த சண்டைக்குள் தலையிட்டாலும் வாங்கிக்கட்டிக்கொள்வீர்கள் என்ற தோரணையில் ரஸ்யா தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது.



சோவியத் ஒன்றிய நாடுகளுக்குள் ரஸ்யாவே அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்ற செல்வாக்கு மிக்க நாடாக விளங்குகின்றது. தற்போதும் பிரிந்து சென்ற நாடுகளுக்குள் ரஸ்யாவின் கையே ஓங்கி நிற்கின்றது. ரஸ்யாவுக்கும் உக்ரைனைக் கைப்பற்றவேண்டிய தேவை அல்லது தனக்குக் கீழ் வைத்திருக்க வேண்டிய தேவை இருக்கிறது. தற்போதும் ரஸ்யா தனது அண்டைய நாடுகளை தனக்குச் சார்பாக மாற்றி வைத்துள்ளது. இந்த இவ்விரு நாடுகளுக்கிடையிலான யுத்தத்தாலும், மேற்கத்தேய நாடுகளின் தலையீடுகளினாலும் உக்ரைன் மக்கள் வீதிகளில் அலைந்து திரியும் நிலையும், பசி பட்டினிக்கு மத்தியில் உடைமைகளை இழந்து, உயிர்களைப் பலிகொடுத்து அண்டை நாடுகளை நோக்கி அகதிகளாக இடம்பெயர்ந்து வருகின்றனர். பெரும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். கொவிட் பரவல் உலகளவில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வரும் இச்சூழலில் இவ் யுத்தம் மேலும் மேலும் இவ்விரு நாட்டு மக்களையும் வாட்டி வதைத்து வருகின்றது. இதற்காக உலகமெங்கிருந்தும் கண்டனங்கள் எழுந்திருக்கின்றது. ரஸ்யாவின் செயற்பாடுகள் குறித்து மேற்கத்தேய நாடுகளிலிருந்து குரல் கொடுக்கப்பட்டு வருகின்றது. உலகின் பெரும் ஊடகங்கள் ரஸ்ய எதிர்ப்பாளிகளாக மாறியுள்ளன என்பது உண்மை. ரஸ்யாவுக்கு எதிராக உலக வல்லரசு நாடுகள் செயற்படும் அளவிற்கு மாறியுள்ளன. ஐ.நா கண்டனங்களைத் தெரிவித்திருக்கிறது. தொடர்ந்தும் அவதானித்து வருவதாகக் கூறியிருக்கிறது. அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ரஸ்யா மீதான பொருளாதாரத் தடைகளை விதித்திருக்கின்றன. இந்தியா, சீனா போன்ற நாடுகள் நடுநிலைமை வகிக்கின்றன. இந்தியா, இவ்விரு நாடுகளும் தான் இச்சண்டையினை பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டும். இதற்குள் பிற நாடுகள் தலையிடுவது முறையல்ல என்கிற தோரணையில், ஐ.நாவிலும் நடுநிலைமை வகித்தது.

உக்ரைன் வளமான விளைநிலங்கள் காரணமாக உலகின் மிகப்பெரிய தானிய ஏற்றுமதி நாடுகளில் ஒன்றாகும். உக்ரைனின் கலாச்சாரமான உட்கட்டமைப்பு, இயல் மற்றும் இசை ஆகியவை தனது கிழக்கு மற்றும் மேற்கு அண்டை நாடுகளைப் பின்பற்றுகிறது. நாட்டின் பெரும்பான்மையான மக்கள், கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தராக உள்ளனர். கிழக்கு உக்ரைன் பகுதியைச் சேர்ந்த மக்களைத் தவிர, ஏனைய பகுதியினர் எல்லாருமே உக்ரைன் ஐரோப்பிய கூட்டமைப்பில் இணைந்துவிடவேண்டும் என்கிற கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். ஐரோப்பியக் கூட்டமைப்பில் இணைந்த பிறகு அண்டை நாடான போலந்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றமும், வளர்ச்சியும் உக்ரைன் மக்கள் மத்தியில் அதுபோன்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருப்பதாக கூறப்படுகிறது. பெரும் கடன் சுமைக்குள் தள்ளப்பட்டிருக்கும் உக்ரைன், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறவேண்டுமெனில், அதன் நிபந்தனைகள் மிகவும் கடுமையானவை என்பது மட்டுமல்ல, உக்ரைனின் சந்தை முழுமையாக வெளிநாட்டு உற்பத்தியாளர்களுக்குத் திறந்துவிடப்பட வேண்டும் என்கிற கட்டாயமும் ஏற்பட்டதால் அப்படி நேர்ந்தால், உக்ரைனின் உள்நாட்டுத் தொழில்கள் அழிந்துவிடும் அபாயம் இருந்தது. உக்ரைனின் இந்த தர்மசங்கடத்தைப் புரிந்துகொண்ட ரஸ்யா, உக்ரைன் அரசுக்கு உதவிகளைச் செய்து ஐரோப்பிய யூனியனில் இணையவிடாமல் தடுத்தது. இது அந்நாட்டுக்குள் எதிர்ப்பலைகளை அப்போதே தோற்றுவித்திருந்தது.

இவ்வாறு ரஸ்யாவுக்கும், மேற்கத்தேய நாடுகளுக்கும் உக்ரைனின் வளங்கள் தேவைப்படுகின்றது. பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ள உக்ரைன், வெளிநாட்டு ஒப்பந்தங்களையும் கடன்களையும், முதலீட்டாளர்களையும் நம்பியிருக்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. கொவிட் பரவல் சூழலுக்கு மத்தியில் பெரும் பாதிப்பு அங்கு ஏற்பட்டுள்ளது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்த மேற்கத்தேய நாடுகள் தக்க சமயம் பார்த்திருக்கின்றன. குளிர்பான நிறுவனங்கள், சமூக வலைதளங்கள், உலகின் மிகப்பெரிய விமான சேவை நிறுவனங்கள், ஊடக நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் என இன்று ரஸ்யாவின் மீது தடைகளை விதித்துள்ளதுடன் தமது சேவைகளை தற்காலிகமாக நிறுத்தியிருக்கின்றன. ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரத் தடைகளை விதித்திருக்கிறது. ரஸ்ய நாட்டினருக்கு வெளிநாடுகளில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் வெளிவந்திருக்கின்றன. பல ரஸ்ய அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது. அந்நாட்டில் வெளிநாடுகளின் தூதரகங்கள் மூடப்பட்டிருக்கின்றன.

இந்த மோதல்களுக்கு மத்தியில் இன்று உலக நாடுகளின் மக்கள் பாதிக்கப்படும் நிலையும் உருவாகியுள்ளது. என்றுமில்லாதவாறு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பெரும் பொருளாதார பின்னடைவைச் சந்தித்து வருகின்றன. குறிப்பாக கச்சா எண்ணெயின் விலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கை போன்ற நாடுகளில் எரிபொருள் பிரச்சினை தலையெடுத்துள்ளது. என்றுமில்லாதவாறு எரிபொருட்களின் விலைகள் பாரிய விலையேற்றத்தினைக் கண்டிருக்கின்றன. மக்கள் ஏற்கனவே கொவிட் பரவலால் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டிருந்த நிலையில் ரஸ்யா - உக்ரைன் யுத்தம் உலகப் போக்கினை மாற்றியுள்ளது. தங்கத்தின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. உர உற்பத்தியில் மிகப்பெரிய ஏற்றுமதி நாடாகத் திகழும் ரஸ்யா, இன்று உர ஏற்றுமதிக்குப் பிரச்சினை வந்துள்ளது. ஏனைய நாடுகளில் உர பற்றாக்குறை தலைவிரித்தாடுகின்றது. ரஸ்யாவின் உற்பத்திகளை ஏனைய நாடுகள் புறக்கணித்துவருகின்றன. இந்தப்போக்கினால் உணவுப்பொருட்களுக்கானத் தட்டுப்பாடும் விலைகளும் அதிகரித்து வருகின்றன. ஏனைய நாடுகளில் உணவுப் பற்றாக்குறைக்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஏற்றுமதிகளைப் பாதித்து வருகின்றது. ரஸ்யாவுடனான போரைத் தொடர்ந்து நேட்டோ படைகளை உதவிக்கு வருமாறு அழைத்த உக்ரைன் அதிபருக்கு அதிர்ச்சியே காத்திருந்தது. உடனடியாக ஐரோப்பிய யூனியனில் தங்களது நாட்டை இணைத்துக்கொள்ளுமாறு ஐரோப்பிய பாராளுமன்றில் அறிவித்திருந்த ஜெலன்ஸ்கி தற்போது ஏமாற்றமடைந்திருக்கின்றார். மேற்கத்தேய நாடுகள் ரஸ்யா மீது வெறுமனே பொருளாதாரத் தடைகளை மாத்திரம் விதித்திருக்கின்றன. **உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை வழங்குவதாக ஒரு சில நாடுகள் கூறியபோதிலும் உலக நாடுகள் தம்மை இன்று கைவிட்டுள்ளதாகவும் ஐரோப்பிய யூனியனில் இணைய தனக்கு தற்போது விருப்பம் இல்லை எனவும் உக்ரைன் பிரதமர் அறிவித்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.** ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு சர்வதேச ஒப்பந்தங்களும், முதலீடுகளும், கடன் வசதிகளும் அத்தியாவசியமானவை அதிலும் குறிப்பாக அபிவிருத்தியடையாத நாடுகளுக்கு மிகவும் அவசியமானவை என்றாலும் உக்ரைன் அதிபர் தற்போது தன் நாட்டு மக்கள் தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். மேற்கத்தேய நாடுகளைச் சார்ந்து தனது நாட்டை வழிநடத்த முடியாத நிலைக்கு வந்துள்ளார். தன் நாட்டு மக்கள் இலட்சக்கணக்கில் உக்ரைனை விட்டு வெளியேறியிருக்கின்றனர். ரஸ்யாவிலும் தஞ்சமடைந்துள்ளனர். மேற்கத்தேய நாடுகளும் இம்மக்களை வரவேற்பதாக அறிவித்துள்ளது. தான் யாரை நம்பினாரோ அவர்களே இன்று தனது நாட்டினையும் நாட்டு மக்களையும் கைவிட்டுள்ளனர் என்கிற நிலையில், உலக நாடுகள் தத்தம் நலன்களுக்காக பிற நாடுகளின் உதவிகளை நாடுவார்கள் என்பதை புரிந்துகொண்டு, உக்ரைன் அதிபர் அவர்கள் நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர். தனது நாட்டின் மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவேண்டும். தனது நாட்டினை வளப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

எனவே, மக்கள் இலட்சக்கணக்கில் வெளியேறியுள்ள நிலையில், வெளிநாட்டு மாணவர்கள் ஆயிரக்கணக்கில் உக்ரைனில் தங்கியிருந்து கல்வி கற்று வந்த நிலையில் இன்று அவர்கள் தத்தமது சொந்த நாடுகளுக்கு செல்வதைக் காண்கிறோம். இந்தச் சூழலில் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் மீது உக்ரைன் மக்கள் வைத்த நம்பிக்கை தொடருமா? உக்ரைன் மக்கள் மீண்டும் தாயகம் திரும்புவார்களா?, வெளிநாட்டு மாணவர்கள் மீண்டும் உக்ரைனில் கல்வி கற்கச் செல்வார்களா?, அல்லது உடனடியாக மீண்டும் சோவியத் ஒன்றியம் உருவாகுமா?.

11ஆம் பக்கம் பார்க்க...

சுழியோடி

# தேசியப் பாதுகாப்பை இலங்கையரசு உறுதிப்படுத்தாதுவிடில் ஆபத்து



ஒரு நாட்டினுடைய கட்டுக்கோப்பான வளர்ச்சிக்கு தேசியப் பாதுகாப்பு என்பது அத்தியாவசியமானது. அதனை யாராலும் மறுக்க முடியாது. அதுவும் இலங்கை போன்ற தீவாக கடலில் மிதக்கும் நாடுகள் தேசியப் பாதுகாப்பு தொடர்பில் அதீத கரிசனை கொள்ளவேண்டியது கட்டாயமானது. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கையானது பல சர்வதேச நாடுகளின் கண்களுக்கு இரையாகாமல் தன்னைப் பாதுகாத்து. நாட்டினை வளர்ச்சிப் பாதை நோக்கிக்கொண்டு செல்வது என்பது அத்தனை எளிதான காரியமல்ல. ஒரு நாட்டினது அபிவிருத்திக்காக சர்வதேசக் கடன்களை அல்லது முதலீட்டாளர்களைப் பெறலாம் ஆனால் அடிமையான நாடாக மாறினால் பெரும் பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகவிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் ஒரு நாட்டினது தேசியப்பாதுகாப்புக்கு வினைத்திறனான ஆட்சியாளர்கள் மிகவும் அவசியம். முப்படைகளின் செயற்பாடுகளுக்கு தலைமை தாங்குபவர் என்கிற வகையில் ஜனாதிபதி மிகவும் சக்திவாய்ந்த நபராகவும் இருப்பார். இதனையொட்டியே இலங்கையில் நிறைவேற்றதிகாரம் என்கிற விடயம் தேசியப் பாதுகாப்பு காரணங்களுக்காகவே அப்போதைய இலங்கையின் சூழலையும் கருத்திற்கொண்டு கொண்டுவரப்பட்டது. அரசியல் நெருக்கடிகளையும் சமாளிக்கவேண்டிய தேவை இலங்கையின் அப்போதைய ஆட்சியாளர்களுக்கு இருந்தது. அதேவேளை அரசியலில் ஸ்திரத்தன்மையினை ஒரு நாடு இழக்கின்றபோது தேசியப் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாக மாறுவதுமுண்டு. ஆட்சியதிகாரங்கள் கைமாற்றப்படுகின்றபோது அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளால் தேசியப் பாதுகாப்பு இலங்கையில் சவால் மிக்கதாக மாற்றம் பெற்ற சந்தர்ப்பங்களும் இல்லாமலில்லை.

இந்த நிலையில் தான் தமிழர்களின் மீதான இலங்கை ஆட்சியாளர்களின் அடக்குமுறைகள் காரணமாக தமிழர்களின் உரிமைப்போராட்டம் அஹிம்சையில் இருந்து ஆயுதத்தை நோக்கி நகர்ந்தது. இதற்குக் காரணமும் இலங்கையின் அரசுகள் தான். விடுதலைப்புலிகள் அமைப்பை இலங்கையரசு பயங்கரவாத அமைப்பாக அடையாளப்படுத்தி இலங்கையில் தடைசெய்ததுடன், இலங்கையின் தேசியப் பாதுகாப்புக்கும் குந்தகம் விளைவித்துள்ளது என்பது தான் உண்மை. கடந்த காலங்களில் இலங்கையினது வடகிழக்குக் கடற்கரையோரங்கள் அண்டைய நாடுகளின் அத்துமீறல்களில் இருந்து பாதுகாப்புப் பெற்றிருந்தபோதிலும் இன்று இலங்கையின் கடற்கரையோரங்கள் பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்நோக்குகின்றன. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வடகிழக்கில் அன்று போதைப்பொருள் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. ஆனால் இன்று கிராமங்கள் தோறும் போதைப்பொருள் பாவனை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இளையவர்கள் அடிமைகளாக மாறியுள்ளனர். பேசித் தீர்க்கப்படவேண்டிய விடயங்களில் ஏற்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட குறைபாடுகள், மேலாதிக்கச் சிந்தனைகள் தான் இன்றைய இலங்கையின் தேசியப் பாதுகாப்புக்கு ஆபத்தாக மாறியுள்ளது.

விவசாயத்தில் தன்னிறைவுடன் இருந்த நாடு இன்று அரசியினை வெளிநாடுகளிடமிருந்து கையேந்தும் நிலைக்கு மாற்றம் பெற்றிருக்கிறது. இலங்கையை ஆட்சிசெய்த கடந்த கால மற்றும் தற்போதைய அரசின் செயற்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தான் இத்தனைக்கும் காரணமாக அமைந்துள்ளது. கடந்த கால அரசுகள் பெற்ற கடன்கள் தான் அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் காலூன்றுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. இந்த சர்வதேச நாடுகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடாகிய இலங்கையின் வளங்களை, தேசியக் சொத்துக்களை, கடற்கரையோரங்களை, எண்ணெய் குதங்களை, பாதுகாப்பு அரணாக விளங்கும் மலைகளை, துறைமுகங்களை குறிவைத்துத்தான் காய்நகர்த்தி, மெல்ல இலங்கைக்குள் ஊடுருவி கடன்களை அள்ளி வழங்கி தமக்குத் தேவையானவற்றை இலங்கையரசிடம் குத்தகைக்கு எடுத்துள்ளன. வேறு வழியின்றி கடந்த கால இலங்கையின் அரசுகள் சர்வதேச ஒப்பந்தங்கள் என்கிற போர்வையில் சர்வதேச நாடுகளை உள்நாட்டிற்குள் செயற்பட அனுமதித்ததன் விளைவு தான் இன்றைய பாதுகாப்புப் பிரச்சினைக்குக் காரணமாக அமைந்துள்ளது. என்றுமில்லாதவாறு இன்று சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்துள்ளது. இலங்கையைச் சேராத பிறிதொரு நாட்டின் இராணுவ சீருடை அணிந்தவர்கள் இலங்கையில் நடமாடித் திரிவதாக அண்மையில் கூட செய்திகள் ஊடகங்களில் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம். சீனாவினால் நாடு முழுவதும் அபிவிருத்திக்காக பாரியளவில் பணம் செலவிடப்படுகின்றது. மேம்பாலங்கள், பாதைகள், போர்ட் சிற்றி என்கிற துறைமுக நகரம், தாமரைக்கோபுரம் என சீனாவினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக இலங்கை சீனாவுக்கு குத்தகைக்காக நிலங்களைக் கையளித்துள்ளது. இந்த ஒப்பந்தங்களினால் வந்த வேலைத்திட்டங்களால் அண்டைய நாட்டினர் எமது நாட்டிற்குள் ஊடுருவிச் செயற்படும் நிலை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை முற்றாகத் தடைசெய்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்கள், இன்று சர்வதேச நாடுகளின் செயற்பாடுகளை பன்மடங்கு இலங்கையில் அதிகரிப்பதற்கான வழிகளை திறந்துவிட்டு வேடிக்கைபார்க்கும் நிலைக்கு வந்துள்ளார். வேறு வழியில்லை பெற்ற கடன்களால் வாய் திறக்க முடியாத நிலை தொடர்கின்றது. சர்வதேச நாடுகளின் ஆதிக்கம் ஒரு நாட்டின் மீது அதிகரிக்கின்றபோது அந்த நாட்டின் தேசியப் பாதுகாப்பு என்பது அச்சுறுத்தலுக்குள்ளாகும் என்பது வழமையானதொன்று. கடந்த கால மஹிந்த ராஜபக்ச மற்றும் தற்போதைய ஆட்சியாளர்களின் செயற்பாட்டால் கடற்பிராந்தியத்தில் இந்தியா பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சீனாவின் இலங்கை கடற்பரப்பின் மீதான அத்துமீறல் இலங்கையின் அண்டை நாடுகளை மாத்திரமல்ல மேற்கத்தேய நாடுகளைக் கூட சினங்கொள்ள வைத்துள்ளது. தற்போது வழமைக்கு மாறாக இந்திய மீனவர்களின் வடக்கு நோக்கிய வருகையும் அதிகரித்துள்ளது.

எனினும் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்கள், நாட்டின் தேசியப் பாதுகாப்பினை வலியுறுத்தித் தான் வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கினார். ஏனெனில் 2019 ஏப்ரல் 21 அப்படியொரு விடியலை இலங்கை மக்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகமும் எதிர்பார்த்திருக்கவில்லை. இலங்கையின் தலைநகர் கொழும்பு மற்றும் ஏனைய நகரங்களில், ஈஸ்டர் பிரார்த்தனைக்காக மக்கள் தேவாலயங்களில் குவிந்திருந்தபோது, நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் ஒட்டுமொத்த உலகத்தையும் அதிர்ச்சியில் உறைய வைத்தது. இதனை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட கோட்டாபய ராஜபக்ச அவர்கள் திறம்பட காய்நகர்த்தினார். எப்படியாவது விட்ட ஆட்சியைப் பிடித்தேயாகவேண்டும் என்ற நிலையில் இருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களும் இதனைச் சிறந்த சந்தர்ப்பமாக பயன்படுத்தினார். மைத்திரி - ரணில் நல்லாட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள், கவனயீனங்கள், அரசியல் குழப்பங்கள் நாட்டின் தேசியக் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திய விடயம் குறித்து இன்றும் மக்கள் திட்டித்தீர்க்கும் நிலை தொடர்கின்றது. இந்த குண்டுவெடிப்பு தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகள் முடிவுற்று அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கையுடன் செயல்படத் தவறியதற்காக, அரசுப் பொறுப்பில் இருந்த சிலரும் கைது செய்யப்பட்டனர். அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் சிலருக்கும் தொடர்பிருப்பதாக அவர்களும் கைது செய்யப்பட்டனர். தற்போது வரை வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. ஆனால் கைதுசெய்யப்பட்ட பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், தேசிய தௌஹீத் ஜமாத் என்ற பயங்கரவாத குழுவால் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த பயங்கரவாத தாக்குதல்களை தடுக்க தவறிய குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோர் கைது செய்யப்பட்டனர். தகவல்கள் அறிந்தும் அது தொடர்பில், உரிய நடவடிக்கை எடுக்காமை குறித்து, இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்டதை அடுத்து முன்னாள் பொலிஸ் மா அதிபருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும் தற்போது இவர்கள் இருவரும் இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இத்தாக்குதல் குறித்து படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்கு உரிய நீதியினை வழங்க இலங்கையரசாங்கம் தவறியிருப்பதாக பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஐ.நாவின் 49வது அமர்வில் கலந்துகொண்டு இலங்கை தொடர்பில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார். இலங்கையில் தொடர்ச்சியாக விசாரணைக்காக அழைக்கப்படும் சாட்சிகள் பின்னர் அரச தரப்பினரால் அச்சுறுத்தப்படும் சம்பவங்கள் தொடர்பிலும் வலியுறுத்தும் சூழல் இருப்பதாக அங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நாட்டின் பாதுகாப்பினைக் காரணங்காட்டி ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்களில் மேடையேறி முழங்கி ஆட்சிக்கு வந்த இன்றைய ஆட்சியாளர்கள், இன்று நாட்டின் தேசியப் பாதுகாப்பினை பலப்படுத்தியுள்ளதாகக் கூறிவருகின்றனர். ஆனால் இன்றும் இலங்கையின் தேசியப் பாதுகாப்பு என்பது பலப்படுத்தப்படவில்லை என்பதே உண்மையான விடயமாகும். கடல் பகுதியின் ஊடாகத்தான் நாட்டிற்குள் போதைப்பொருள் பெருமளவில் கொண்டுவரப்படுகின்றது. வடகிழக்கில் இந்த வர்த்தகம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதனைவிட நாட்டின் இராணுவமயமாக்கல் மக்களை அச்சம் கொள்ளவும் வைத்துள்ளது. இலங்கையின் அனைத்துத் துறைகளுக்குள்ளும் இராணுவத்தினரின் பிரசன்னம் நாட்டின் போக்கு குறித்து கேள்வியை எழுப்பியுள்ளது. சிறுபான்மை மக்களையும் கடந்து தெற்கிலுள்ளவர்களே இராணுவத் தலையீடுகள் தொடர்பில் கேள்வியெழுப்பி வருகின்றனர்.

ஒரு நாட்டினது தேசியப் பாதுகாப்புக்கொள்கை என்பது ஒவ்வொரு ஆட்சிக்கு ஏற்றது போல் மாற்றமடைகின்ற போது தான் சிக்கல்கள் உருவாகின்றன. நிலையான கொள்கையுடன் அதற்கான தனியான அந்தஸ்துகள் சட்டங்கள் உருவாக்கப்பட்டு, எந்த அரசியல் தலையீடுகளுமற்று, இலங்கையில் வாழும் மூவினங்களுக்கும் ஏற்றது போல, சர்வதேச சட்டதிட்டங்களுக்குட்டு, பாரபட்சமற்ற ஒரு தனியான குழு இலங்கையின் தேசியப் பாதுகாப்புக்கு அவசியம்.

**இரணியன்**



# பிராந்திய செய்திகள்



## மின்சாரம், எரிபொருள், எரிவாயு இல்லை சுற்றுலாப் பயணிகள் நாட்டை விட்டு வெளியேற்றம்!

மின்சார நெருக்கடி மற்றும் டீசல் தட்டுப்பாடு காரணமாக நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தமது பயணங்களை நிறுத்தியுள்ள தாக சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். ஹோட்டல் உரிமையாளர்கள் கூறுகையில், 'ஹோட்டல்களில் மின்வெட்டு ஏற்பட்டால் டீசலில் இயங்கும் ஜெனரேட்டர்கள் மூலமே மின்சாரம் தயாரிக்கப்படுகிறது.

வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் பயணங்களுக்கு எரிபொருளை வழங்க முடியாமல் யால மற்றும் ஏனைய பூங்காக்களும் வேகம் குறைந்துள்ளன. மேலும், ஹோட்டல்களில் உணவு தயாரித்தலுக்கும் கேஸ் தட்டுப்பாடு காரணமாக நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்தக் காரணங்களால் சுற்றுலாப் பயணிகள் விரக்தியுடன் இலங்கையை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளதாகவும், இது சுற்றுலாத் துறைக்கு பலத்த அடியாகும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.



## இலங்கையின் வயதான பெண்மணி 116 ஆவது வயதில் காலமானார்

இலங்கையின் மிகவும் வயதான பெண்மணி தனது 116 வயதில் காலமானார். கே.ஜி.டிங்கிஹாமி எனப்படும் இவர் மாத்தறை வெலிகமவில் உள்ள கனகேவத்தையில் வசித்து வந்தவராவார். பூதவுடல் அன்னாரது வீட்டில் வைக்கப்பட்டுள்ளதுடன் மார்ச் 12 அன்று இறுதிச் சடங்குகள் நடைபெற உள்ளன.



## விமான டிக்கெட்டுகளின் விலை அதிகரிப்பு

இலங்கையில் வழங்கப்படும் அனைத்து விமான டிக்கெட்களின் விலைகளையும் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நாணய மாற்று வீதம் அதிகரித்துள்ளமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, அன்று(11)முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கையில் வழங்கப்படும் அனைத்து விமானப் பயணச்சீட்டுகளுக்கான கட்டணம் 27% ஆக அதிகரிப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.






## எரிபொருள் -எரிவாயு தட்டுப்பாடு வடக்கிலுள்ள உணவகங்களும் மூடப்படும் நிலை

எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக வடக்கில் உள்ள மக்களும் அவதிக்குள்ளாகி வருவதாகவும், பல பகுதிகளில் உள்ள உணவகங்கள் எரிவாயு பற்றாக்குறையால் மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் உணவக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து முக்கிய உணவகங்களும் தற்போது மூடப்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## மருந்துகளின் விலையை நியாயமான விலையில் அதிகரிக்க அரசாங்கம் தீர்மானம்

மருந்து இறக்குமதியாளர்களுக்கு நியாயமான விலையில் மருந்து விலையை அதிகரிக்க அனுமதி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போதைய அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு முகங்கொடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். இலங்கையில் டொலரின் பெறுமதி உயர்வினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



## சிவப்பு அறிவித்தல் வெளியிடப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு நீர் விநியோகம் நிறுத்தப்படும்

சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்ட நுகர்வோருக்கான நீர் விநியோகத்தை துண்டிக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தீர்மானித்துள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் மேலும் நீர் வெட்டுகள் மேற்கொள்ளப்படும் என அதன் பொது முகாமையாளர் ஏக்கநாயக்க வீரசிங்க அன்று (10) தெரிவித்தார். நீர் பாவனையாளர் 1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க சட்டத்தின்படி தண்ணீர் பில் வழங்கப்பட்ட 30 நாட்களுக்குள் தங்கள் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். மேலும் சிவப்பு அறிவித்தல் வெளியிடப்பட்ட 48 மணி நேரத்துக்குள் பில்கள் செலுத்தப்பட வேண்டும்.

நீர் வெட்டு தொடர்பான இறுதி அறிவிப்பு வெளியாகி 14 நாட்களுக்குள் கட்டணம் செலுத்தத் தவறிய நுகர்வோருக்கு மாவட்ட அளவில் குடிநீர் விநியோகம் நிறுத்தப்படும் என உதவிப் பொது மேலாளர் தெரிவித்தார். ஜனவரி மாதத்தில் நுகர்வோர் செலுத்தத் தவறிய தொகை சுமார் 7200 மில்லியன் ரூபாவாக இருந்ததாகவும் தற்போது அது 6000 மில்லியன் ரூபாவாகும் எனவும் பொது முகாமையாளர் தெரிவித்தார். நீர் விநியோகம் துண்டிக்கப்பட்ட பின்னர் மீண்டும் இணைக்க வீட்டு வாடிக்கையாளர்களுக்கு 1080 ரூபாவும் மற்றும் பொது,தனியார், வழிபாட்டுத் தலங்கள் , வணிக நிறுவனங்களுக்கு 3240 ரூபாவும் வசூலிக்கப்படும் என்றார். சுமார் 1.5 மில்லியன் நுகர்வோர் பல மாதங்களாக நீர் கட்டணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கைக்கு 500 மில். அமெரிக்க டொலர் கடன்




பெட்ரோலியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு, இலங்கைக்கு இந்தியா வழங்கிய 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்க உள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையில் தினமும் ஏழரை மணி நேரம் மின்வெட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் இலங்கையையும் விட்டு வைக்கவில்லை.

இதுமட்டுமின்றி அந்நிய செலாவணி கையிருப்பு குறைவால் கச்சா எண்ணெய் வாங்க முடியாத சூழல் உள்ளது. இதனால் கச்சா எண்ணெய்க்கு பற்றாக்குறை ஏற்பட்டு அங்குள்ள பெட்ரோல், டீசல் நிலையங்களில், நீண்ட வரிசைகளில் வாகனங்கள் காத்திருப்பதை காணக்கூடியதாக உள்ளது.




## எரிபொருள் விலை அதிகரிப்பு: பஸ் உரிமையாளர்களுக்கான வேலைத்திட்டத்தை வகுக்குமாறு கோரிக்கை

எரிபொருள் விலை அதிகரிப்பை கருத்திற் கொண்டு பஸ் உரிமையாளர்களுக்கான வேலைத்திட்டத்தை வகுக்குமாறு இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் போக்குவரத்து அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தவிர்க்க முடியாமல் எரிபொருள் விலையை அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக சங்கத்தின் தலைவரான கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அன்று புதன்கிழமையும் அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடியதாகவும் அவர் தெரிவித்தார். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மீண்டும் டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விநியோகம் குறைக்கப்படுவதோ அல்லது எரிபொருள் விலை அதிகரிப்பை எதிர்பார்த்து எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இருப்புக்களை மறைப்பதாலோ இது ஏற்படலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# சினிமா துளிகள்



## சிவகார்த்திகேயனை பாராட்டிய விஜய்

நடிகர் சிவகார்த்திகேயனை அரபிக் குத்து பாடலுக்காக விஜய் பாராட்டியதாக சமீபத்திய நிகழ்ச்சியில் பகிர்ந்துள்ளார்.

விஜய் நடிப்பில் நெல்சன் இயக்கியுள்ள திரைப்படம் பீஸ்ட். இப்படத்தில் விஜய்யுடன் இணைந்து செல்வராகவன், பூஜா ஹெக்டே, யோகி பாபு, கிங்ஸ்லி உள்ளிட்ட பலர் நடித்து வருகின்றனர். படத்தின் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. பீஸ்ட் படம் ஏப்ரல் 14-ம் திகதி வெளியாகவுள்ளது.

பீஸ்ட் படத்தில் இடம்பெற்ற 'அரபிக்குத்து' பாடல் அனைவரையும் கவர்ந்து பல சாதனைகளை முறியடித்தது. வித்தியாசமான வரிகள் இடம்பெற்ற இந்த பாடலை நடிகர் சிவகார்த்திகேயன் எழுத்தியுள்ளார். இப்பாடலுக்கு திரைதுறையினர், ரசிகர்கள் என பலரும் நடனமாடி பதிவிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் சமீபத்தில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சிவகார்த்திகேயன் இப்பாடல் குறித்தும் விஜய் குறித்தும் சில விஷயங்களை பகிர்ந்துள்ளார். இப்பாடலை கேட்டு விஜய் சார் உங்களிடம் என்ன சொன்னார் என்ற கேள்விக்கு, இந்த பாடலை முன்பே படமாக்கிவிட்டார்கள். அதனால் விஜய் சார் இந்த பாடல் குறித்து என்ன நினைத்தார் என்று தெரியவில்லை, சமீபத்தில் தான் இதன் புரோமோ வீடியோ சூட் செய்தோம். அப்போது தான் விஜய் சார் தொலைபேசியில் "சூப்பர் பா. எழுதிக் கொடுத்ததிற்கு ரொம்ப தேங்க்ஸ் பா. அரபிக் எல்லாம் பயங்கரமா எழுதுறியே" என்று கூறினார்.



## மீண்டும் சுதா கொங்கரா இயக்கத்தில் நடிக்கும் சூர்யா



சூரரைப்போற்று படத்தின் வெற்றிக்கு பிறகு சுதா கொங்கரா இயக்கத்தில் சூர்யா நடிக்க இருப்பதாக இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

சூர்யா நடித்த ஜெய்பீம் படத்தின் வெற்றியை தொடர்ந்து தற்போது வெளிவரவிருக்கும் படம் எதற்கும் துணிந்தவன். பாண்டிராஜ் இயக்கிருக்கும் இப்படம் வரும் 10-ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாக இருக்கிறது. அதன் பின் பாலா மற்றும் வெற்றிமாறன் ஆகியோரின் படங்களில் நடிக்கவுள்ளார். இதனை தொடர்ந்து மீண்டும் சுதா கொங்கராவுடன் சூர்யா இணையவுள்ளதாக இசையமைப்பாளர் ஜி.வி பிரகாஷ் தெரிவித்துள்ளார்.


ஏப்ரல் 1 ஆம் திகதி வெளியாகவிருக்கும் "செல்.ஃ.பீ" படத்தில் கௌதம் மேனன் மற்றும் ஜி.வி பிரகாஷ் இருவரும் இணைந்து நடித்துள்ளனர். இப்படம் குறித்து சமூக வலைத்தள பக்கத்தில் ரசிகர்களுடன் ஜி.வி பிரகாஷ் கலந்துரையாடினார். அப்போது ரசிகர் ஒருவர் சூர்யா-சுதா கொங்கரா இருவரின் அடுத்த படம் குறித்து கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த ஜி.வி பிரகாஷ், "கண்டிப்பாக இருவரும் இணைகிறார்கள். இந்தாண்டின் இறுதியில் இப்படத்திற்கான அறிவிப்பு வரலாம். அதற்கான வேலைகள் நடந்து வருகிறது" எனத் தெரிவித்துள்ளார். இது சூர்யா ரசிகர்களின் மத்தியில் வைரலாக பரவிவருகிறது.

## ஹாலிவுட் படத்தில் ஆலியா பட்

பாலிவுட்டின் முன்னணி நடிகையான ஆலியா பட் தற்போது ஹாலிவுட் படத்தில் நடிக்கவுள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

உட்தா பஞ்சாப், டியர் ஜிந்தகி, கல்லி பாய் போன்ற பல பாலிவுட் படங்களில் நடித்து பிரபலமடைந்த நடிகை ஆலியா பட். இவர் தற்போது கங்குபாய் கத்யாவாடி, ஆர்ஆர்ஆர் போன்ற படங்களில் நடித்திருக்கிறார். சஞ்சய் லீலா பன்சாலி இயக்கியுள்ள "கங்குபாய் கத்யாவாடி" படம் ரிலீஸாகி வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது. இப்படம் 1960களில் மும்பையின் சிவப்பு விளக்குப் பகுதியில் வாழ்ந்த கங்குபாய் என்பவரது வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டிருந்தது.

ராஜமௌலி இயக்கத்தில் இவர் நடித்துள்ள "ஆர்ஆர்ஆர்" திரைப்படம் வரும் 25-ம் திகதி வெளியாகவுள்ளது. இந்நிலையில் அலியா பட் ஹாலிவுட் படத்தில் நடிக்கவுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. வொண்டர் வுமன் படத்தின் நாயகி கல் கடோட் மற்றும்ஜேமி டோர்னன் ஆகியோருடன் இணைந்து அலியா பட் நடிக்கவுள்ளார். நெட்பிளிக்ஸ் ஒரிஜினலாக உருவாகும் இப்படத்தை ஸ்கைடான்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இதனை இயக்குனர் டாம் ஹார்பர் இயக்குகிறார். இப்படத்திற்கு "ஹார்ட் ஆப் ஸ்டோன்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.



## ஐஸ்வர்யா ராஜேஷ் நடிக்கும் புதிய படம்

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகையாக வலம் வரும் ஐஸ்வர்யா ராஜேஷ் புதிய படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

காக்கா முட்டை படத்தில் தனது நடிப்புத் திறமையின் மூலம் அனைவரையும் ஈர்த்தவர் நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ். தொடர்ந்து வடசென்னை, கனா, நம்ம வீட்டு பிள்ளை, தர்மதுரை, செக்க சிவந்த வானம், வானம் கொட்டட்டும், கா.ஃ.பெ ரணசிங்கம் போன்ற படங்களில் வித்தியாசமான கதாபாத்திரங்களை ஏற்று நடித்து முன்னணி நடிகையாக உயர்ந்தார்.

கோலிவுட்டில் பிசியான நடிகையாக வலம்வரும் இவர், துருவ நட்சத்திரம், டிரைவர் ஜமுனா, தி கிரேட் இந்தியன் கிச்சன் ரீமேக், மோகன் தாஸ் போன்ற படங்களை கைவசம் வைத்துள்ளார். இவர் தற்போது புதிய படமொன்றில் ஒப்பந்தமாகியுள்ளார். இதனை லாக்கப் படத்தை இயக்கிய எஸ்.ஜி.சார்லஸ் இயக்கவுள்ளார். ஐஸ்வர்யா ராஜேசுடன் இணைந்து லட்சுமி பிரியா, சுனில் ரெட்டி, கருணாகரன், மைம் கோபி, தீபா ஷங்கர், கிங்ஸ்லி உள்ளிட்ட பலர் நடிக்கிறார்கள். இப்படத்தை ஹியூபாக்ஸ் ஸ்டுடியோஸ் மற்றும் ஹம்சினி என்டர்டைன்மெண்ட் என்ற பட நிறுவனங்கள் இணைந்து "புரொடக்ஷன் நம்பர் 1" என்ற பெயரில் தயாரிக்கின்றனர்.

இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் பூஜையுடன் துவங்கியுள்ளது. படத்தில் பணியாற்றும் பிற நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் பற்றிய அதிகாரபூர்வமாக அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.





# மன்னாரை சேர்ந்த தேசிய உதைப்பந்தாட்ட வீரர் டக்ஸன் பியூஸ்லஸ்



விளையாட்டுத்துறையை கொண்டாடும் ஒவ்வொருவருக்கும் பியூஸின் மரணம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு பெரும் இழப்பாகும்.

மன்னார் பனங்கட்டு கொட்டு பகுதியில் இருந்து பட்டி தொட்டி எல்லாம் தெரியும் அளவுக்கு தனது கால்பந்தாட்டத்தின் திறமையினால் மிளிர்ந்தவன் பியூஸ்.

1990 ஆண்டு பிறந்த பியூஸ் சிறுவயதில் இருந்தே கால்பந்தாட்டத்தின் தீவிர ரசிகன் ஆவான்.

கால் பந்தின் மேல் கொண்ட தீரா காதல் காரணமாக பாடசாலை காலங்களில் பாடசாலை அணிக்காக பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பல வெற்றிகளுக்கு சொந்தக்காரன்.

பாடசாலை மட்டத்தில் மாத்திரம் இல்லை கழக ரீதியான போட்டிகளிலும் பிரகாசித்த பியூஸ் ஒரு கட்டத்தில் கால்பந்தாட்டத்தில் தமிழர்களுக்கான அடையாளம் ஆனான்.

தேசிய போட்டிகள் மாத்திரமின்றி சர்வதேச போட்டிகளிலும் பல விருதுகளை வாங்கி குவித்துள்ளார்.

தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வளர்ந்த பியூஸ் பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளை கடந்து பல காயங்கள் உபாதைகளை பொருட்படுத்தாமல் நாட்டுக்காகவும் தனது அடையாளத்தை நிலைப்படுத்த போராடிய ஒரு வீரன்.

சொந்த நாட்டில் கால்பந்தாட்ட அணிக்காக விளையாடினாலும் தொழில் சார் அங்கீகாரம் என்பது தமிழர்களுக்கு எப்போதும் எட்டாக்கனியாக உள்ளது.

நீண்ட போராட்டங்களின் பின்னர் தனக்கான அங்கீகாரத்துக்காக மாலைதீவில் கிடைத்த வாய்ப்பின் காரணமாக அங்குள்ள கழக அணி ஒன்றுடன் ஒப்பந்த ரீதியில் பணியாற்றி வந்த நிலையிலே அன்றைய தினம் (26.02.22) இந்த துயர் சம்பவம் இடம்பெற்றுள்ளது.





பல கால்பந்தாட்ட வீரர்களுக்கு முன்மாதிரியாக திகழ்ந்த வீரன் தனக்கான தொழில் ரீதியான அங்கீகாரம் தன் நாட்டில் கிடைக்காமையினால் வேறு ஒரு நாட்டில் தனது திறமையை வெளிப்படுத்தி நிரப்ப முடியாத வெற்றிடம் ஒன்றை ஏற்படுத்தி சென்றுள்ளமை மன்னார் மாவட்டத்தையும் இல்லை கால்பந்தாட்டத்தில் பால் ஈர்க்க முடியாத பலருக்கு மீள முடியாத துயராகும்.

**சொந்த நாட்டில் தனக்கான அங்கீகாரம் இன்றி போராடும் பலருக்கு இவன்ஒருஅத்தியாயத்தை ஆரம்பித்து செல்கின்றான்.**

# விடியும் திசை நோக்கி ஓர் உன்னத பயணம்



1990இன் நடுப்பகுதி யாழ்ப்பாணத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள கல்வி, கலை, விவசாயம் அனைத்திலும் சிறப்பான ஓர் இடமான இனுவில் பகுதியில் காலை 5 மணி கந்தசாமி கோவில் மணியோசை ஊரெல்லாம் பிரவசிக்க பாயில் படுத்திருந்த பொண்ணுத்துரை சுதாகரித்துக்கொண்டு படுக்கையை விட்டு எழுந்து மாட்டு கொட்டிலுக்கு சென்று மாடுகளுக்கு வைக்கோலை அரிந்து போட்டுவிட்டு கிணற்றடிக்கு சென்று சில்லென்ற நீரில் முகம் கழுவிய பின் இரவு பிடுங்கிய கத்தரிக்காய் மூட்டைகளை வண்டிலில் ஏற்றிவிட்டு மாடுகளை அவிட்டு வந்து வண்டிலில் பூட்டி முடிக்கவும் கையில் தேனீர் கோப்பையுடன் தவமணி வந்து இஞ்சேருங்கோ பெட்டையின்ட மாப்பிள்ளை வீட்டார் நாளைக்கு வருகினமாம் முடிவு சொல்ல வேண்டுமாம் என்று ஐயாத்துரை மாஸ்டர் நேற்று சொன்னார் என்னப்பா செய்யப் போறியல். ஓமப்பா நேற்று இது விசயமா மகன் சொன்னவன் தானே தனக்கான இரண்டு பரப்பு காணியை விற்று அக்காவின் கல்யாணத்தை முடிப்பான் என்று எல்லாம் சரிவரும் தான் பார்த்துக் கொள்கின்றேன் என்று சொல்லிவிட்டு வண்டிலை எடுக்க தவமணி சென்று படலை திறக்க மாடுகள் இரண்டும் சலங்கை ஒலியுடன் சுண்ணாகம் சந்தையைநோக்கி பறந்தது. தவமணியும் காலைச் சாப்பாடு செய்ய ஆயத்தமாகிகொண்டு மகள் வதனி எழும்பனே என்று மகளை எழுப்பி விட்டு தம்பி பிரணவன் உந்த தேங்காயை ஒருக்கா உரித்து தாமோனே என்று மகனையும் எழுப்பிவிட்டு கிணற்றடிக்கு சென்றாள். தவமணி அக்கா, தவமணி அக்கா என்று கேற்றடியில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. தம்பி பிரணவன் ஒருக்கா யார் என்று பாரடா என்று சொல்ல பிரணவன் படலை பக்கம் சென்றுவிட்டு ஐயோ என்று ஓலமாக கத்தினான்.

ஆம் அவனது தகப்பன் சந்தைக்கு செல்லும் வழியில் நெஞ்சடைத்து மரணமாகிவிட்டார். செத்தவீடு முடிந்து ஒரு கிழமையாகிவிட்டது தவமணிக்கு இன்று அந்த பிரமை விட்டு போகவில்லை கண்ணீர் சிந்தியபடி படியில் இருந்தாள் உறவுக்காரர் சிலர் இன்னமும் துக்கம் விசாரித்துக்கொண்டு இருந்தனர்.

ஐயாத்துரை மாஸ்டர் வந்து எடி தவமணி இப்படியே அழுது கொண்டு இருந்து என்ன செய்யப்போகின்றாய். பிள்ளையள் பாவம் என்று ஆறுதல் கூறி பிள்ளை தவமணி மாப்பிள்ளை வீட்டார் நேற்று என்னட்டை வந்தவே கல்யாணத்தை நிறுத்த சொல்லிட்டினம் கல்யாணம் பேசி முற்றாகின்ற நேரத்தில் இவ்வாறு ஓர் துக்கநிலையை அபசகுணமாய் இதனை கேட்டு தவமணி இடியாய் உறைந்து போனாள். அப்பொழுது பிரணவன் ஐயாத்துரை மாஸ்டர் என்னுடைய அக்காவுக்கு நான் இதைவிட நல்ல இடத்தில் திருமணம் செய்து வைக்கிறன் அம்மா நீங்கள் கவலைப்படாதீங்கோ நான் வெளிநாடு போகப்போறன் பல்கலைக்கழக படிப்பை நிறுத்திவிட்டு வெளிநாடு போறன் என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றான்.

அவன் பல்கலைக்கழகத்தில் வர்த்தக பிரிவில் பயின்றுகொன்று இருந்தவன். ஒருவாறு ஏஜென்டை பிடித்து அவனது நண்பன் ஒருவரின் உதவியுடன் வெளிநாடு செல்ல கொழும்பு சென்றான். சென்றவன் சென்றவன் தான் அன்று போனவன் அதற்கு பின் அவனைப் பற்றி தகவல் ஏதும் இல்லை. தவமணி இடிந்துபோனாள் கணவர் போய் 2 மாதத்திற்குள் மகனையும் காணவில்லை. அயர்ந்து தூங்கியவளை எழுப்பினாள் வதனி அம்மா எழும்புங்கோ தேத்தண்ணியை குடியுங்கோ நான் கொஸ்பிட்டலுக்கு போறன் என்றுகூற கார் கதவை திறந்தாள் ஆம் அவள் ஓர் வைத்தியர் இன்று அவளுக்கு வைத்தியசாலை பணிப்பாளர் பதவி வழங்கப்படவுள்ளது. **விடியும் திசையை நோக்கி அவள் உற்சாகமாய் பயணிக்கத் தொடங்கினாள் செல்வி வதனியாக.**

சிறுகதை

தாயகத்தான்

04ஆம் பக்க தொடர்ச்சி...

தற்போதைய ஆட்சியில் பதவி மாறி அதாவது கோட்டாபய அவர்கள் ஜனாதிபதியாகவும் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பிரதமராகவும் ஆட்சியமைத்திருக்கின்றனர். எனவே இவர்களிடம் போய் தமிழினப் படுகொலைகளுக்கான நீதி தொடர்பில் கோர முடியாது. தமிழ் மக்கள் எதிர்பார்த்து பாரிய பங்களிப்புடன் ஆட்சிக்குக் கொண்டுவந்த மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சியே தமிழ் மக்களுக்கான நீதியை வழங்கவில்லை. வரலாறு நெடுகிலும் ஏமாற்றங்களாலும் போலியான வாக்குறுதிகளுக்குள்ளும் தான் தமிழினத்தின் வாழ்வு கட்டமைக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாடுகள் தமது தேவைக்காக தமது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக தமிழ் மக்களைப் பயன்படுத்தி வருகின்றது என்பதுதான் உண்மை.

குறுகிய கால தமது தேவைகளுக்காக தமிழ் மக்களது பிரச்சினைகள் கையில் எடுக்கப்படுகிறது. பேசிப்பேசியே காலங்கள் வீணடிக்கப்படுகிறது. இன்று தமிழ் மக்கள் ஐ.நாவையும் கடந்து சர்வதேச நீதிமன்றின் உதவியை நாடியிருக்கின்றனர். ஐ.நாவால் இலங்கை மீதான உறவினைத்தான் பேணமுடியுமே தவிர இனப்படுகொலைக்கான நீதியினைக் கொடுக்க முடியாது. பல்வேறு நாடுகளின் வலைப்பின்னலில் இயங்குவதுதான் ஐ.நா சபை. அவர்களால் தனித்து எந்தவித முடிவினையும் எடுக்க இயலாத சூழல் அங்கு இருப்பது உண்மையே.

எனவே யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பிற்பாடு தமிழ் மக்களது பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனினும் மீளவும் துரிதகதியில் வடகிழக்குப் பிரதேசங்கள் கட்டமைக்கப்பட்டு வருகின்றது. அரசின் நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் தமிழர் தமது நிலப்பரப்பை மீட்க தக்கவைக்கப் போராடியே வருகின்றனர். பௌத்த பிக்குகளின் அத்துமீறல்களும் வடகிழக்கில் தொடர்கின்றது. சிங்களக் குடியேற்றங்கள் திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றன. ஆலயங்கள் சேதப்படுத்தப்படுகின்றது. இன்று தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கும் கட்சிகள் பிளவடைந்து துண்டு துண்டாக உடைந்து புதிது புதிதாக முளைத்திருக்கின்றன. இதனால் ஒற்றுமை சீர்குலைந்துள்ளது என்பது வருத்தமான செய்தி. தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம் என்று கூறும் பலர் இன்று அரச நிகழ்ச்சிநிரலில் அரச கட்சிகளில் இணைந்தும் செயற்படுகின்றனர். தமிழ் மக்களுக்கான நீதி கிடைக்கவேண்டுமாயின் தமிழினம் கல்வி மற்றும் பொருளாதார ரீதியில் உச்சம் தொட வேண்டும். வடக்கின் கல்வி இன்று சரிவடைந்துள்ளது. பிறப்பு விகிதம் வீழ்ச்சி கண்டுள்ளது. எனவே துரிதகதியிலான மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டுமெனில் படிப்படியான நிலையான திட்டங்கள் கட்டமைக்கப்பட்ட ரீதியில் மீண்டும் தமிழினத்திற்குள் உருவாக்கப்படவேண்டும். எமது அரசியல் ரீதியான இருப்பு தக்கவைக்கப்படவேண்டும். பலப்படுத்தப்படவேண்டும். அதற்கான பாதை வகுக்கப்பட்டுள்ளது. பயணிக்க, இருக்கக்கூடிய தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஒற்றுமையாக செயற்படவேண்டும் என்பதே இன்றைய யதார்த்தம்.

06ஆம் பக்க தொடர்ச்சி...

ரஸ்யாவுக்கு ஆதரவாக இணைந்து உக்ரைன் செயற்படுமா?. உக்ரைனில் ஆட்சிக் கவிழ்ப்பு நடக்குமா?. ஜெலன்ஸ்கி தானாகவே முன்வந்து பதவி விலகுவாரா?. மேற்கத்தேய நாடுகளைச் சார்ந்து இனி ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் செயற்பாடுகள் இருக்குமா?. மேற்கத்தேய நாடுகளின் நிலைப்பாடு இனி என்னவாக இருக்கும் இதுபோன்ற பல கேள்விகள் தற்போது எழுந்துள்ளன. இந்நிலையில், உலக நாடுகளின் உதைபந்தாட்டக் களமாக இன்று உக்ரைன் மாறியிருக்கிறது என்பதுதான் இன்றைய யதார்த்தம்.

02ஆம் பக்கம் பார்க்க...

நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கில் சர்வ கட்சி மாநாட்டைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இது தொடர்பான சர்வ கட்சி மாநாடு இம்மாத இறுதியில் நடைபெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அண்மைக்கால வரலாற்றில் இதுவரை கண்டிராத பொருளாதார நெருக்கடியை இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ளது. கட்சி வேறுபாடின்றி அரசியல் இணக்கப்பாட்டுக்கு வந்து அவ்வாறானதொரு நிலைமையை எதிர்கொள்ள முடியாவிட்டால் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படும் என பல தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர். பாரிய அரசியல் அனுபவம் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவி வகித்த போதிலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதவி காலத்தை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை என்பதோடு, ஜனாதிபதி பதவி என்பது அவரைப் பொறுத்தமட்டில் கைக்கு எட்டாத ஒன்றாகவே உள்ள நிலையில், சஜித் மற்றும் ரணில் அணியினரை மீண்டும் ஒன்றாக இணைக்கும் முயற்சிகள் திரைமறைவில் இடம்பெற்று வருவதாக செய்திகள் வெளிவந்தவண்ணம் இருந்த சூழலில், தற்போது தேசிய அரசாங்கம் குறித்துப் பேசப்படுகின்றது. அதில் ரணில் அவர்களை மீண்டும் பிரதமர் பதவியில் அமர்த்தவுள்ளதாகவும், எனினும் அவர் மீது பிணைமுறி தொடர்பான சர்ச்சை இருப்பதன் காரணமாக இழுபறி நிலை தொடர்வதாகவும் செய்திகள் கசிய ஆரம்பித்துள்ளன. எது எவ்வாறிருப்பினும், மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவின் காய்நகர்த்தல்கள் இலங்கை அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளதாகவே தெரிகிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

## பெண்மையின் பேராற்றல்

பெண்ணே நீ பேராற்றலின்
சிறு பொறி!

பெண்ணே! எடுத்துக்காட்டு
வேண்டுமா?

கனல் விழியால் மதுரையை எரித்தாள்
கண்ணகி!

ஒடி ஒடியே உலகத்தின்
பார்வையை தன் காலடியில்
விழ வைத்தாள்
பி டி உஷா!

அடிமை சிறையை அகிம்சையால்
உடைத்து சுதந்திர நாடாக்கினாள்
ஆங் சாங் சூகி!

நில்லென்று சொல்லி
நில்லாத சூரியனை நிறுத்தினாள்
நளாயினி!

காலனையும் கருத்து பிறழ செய்து
கணவன் உயிர் மீட்டாள்
சாவித்திரி!

வஞ்சகம் ஏந்தி வந்த
ஆங்கிலேயரை வாளேந்தி விரட்டினாள்
இராணி இலட்சுமிபாய்!

பெண்ணே நீ தீக்குச்சி!
ஒரு பெட்டியில் அடங்கி விடாதே!

உன் அனலை அடுக்களையில்
அடக்கம் செய்து விடாதே!
அக்னி பார்வை கொள்!

அகிலத்தை உன் பார்வையால்
அடக்கு!

உயிர்க்கெழு உயரங்கள் தொடு
உனக்குள்உள்ள உள்ளொளி
பெருக்கு!

போராற்றலின் சிறு துளியே!
அணுகுண்டைப் போல்
வெடி! அகிலம் காணும்
புதுவழி!

# பெண்கள் பற்றிய தத்துவ பொன்மொழிகள் !

பெண் இறைவனின் படைப்புகளில் அனைத்தும் அழகானது , மேலானது – மில்டன்

எந்த வீட்டில் பெண்கள் கௌரவமாக நடத்தப்படுகிறார்களோ அங்கு தேவதைகள் குடியேறும் – மனு

ஒரு பெண்ணை படிக்க வைப்பது ஒரு குடும்பத்தையே படிக்க வைப்பதற்கு நிகரானது – டிக்கன்ஸ்

பெண்ணே மனிதனின் உயர்ந்த ஊக்கங்கள் எல்லாவற்றிக்கும் விளக்கு – ஜேம்ஸ் எல்லீஸ்

உலகத்தின் உன்னதமான பொருள் பரிபூரணம் அடைந்த பெண்ணே – லவல்

அவதூறு நல்ல பெண்ணின் வீட்டு வாசலில் பலமிழந்து மாய்ந்து விடுகிறது – ஹீஸ்

பெண்ணின் மடியில் இறையன்பு வளர்கிறது – இக்பால்

பெண் இல்லாத வீடும் , வீடில்லாத பெண்ணும் மதிப்பில்லாதவையே – சைரஸ்

வாழ்க்கை எனும் ஆற்றை , கடலை கடப்பதற்கு படகோ கப்பலோ அவசியம் தேவை – கண்டேகர்

நாகரீகம் உண்டாக்கதக்க நிச்சயமான வழி பெண்ணின் செல்வாக்கு தான் – மெர்ஸன்

பெண்ணின் அன்பும் பரிவும் எங்கு இருக்கிறதோ அங்கே ஆடையும் , பண்பும் அடைக்கலம் – மாபாசன்

பெண்ணின் வாழ்வு அன்பின் சரித்திரம் – துவிஜேந்திரலால்

ஆணை அடக்கிப் பண்படுத்தவே ஆண்டவன் பெண் பிறவியைப் படைத்திருக்கிறான் – வால்டேர்

ஒரு நாட்டில் பெண்கள் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களோ அவ்வளவு தூரமே அந்நாடு முன்னேறும் – ஜவஹர்லால் நேரு

காற்றை விட கடுவேகம் கொண்டது பெண்ணின் எண்ணம் – ஷேக்ஸ்பியர்

அறிவின் தாயகமாய் அருள் நிறைந்த உள்ளமாய் இருப்பவள் பெண் – ஜெயகாந்தன்

பெண்ணுரிமை இல்லாத நாடு காற்றில்லாத வீடு – லெனின்

சகிப்பு தன்மையில் வலிமை நிறைந்தவள் பெண் – காந்தியடிகள்

அன்பு செய்யும் பெண்ணின் நெஞ்சம் எப்போதும் இன்மை உடையது – டேவிட்ஹியூம்

பெண்கள் யாரை மனதார காதலிக்கிறார்களோ அந்த ஆண்கள் அந்த பெண்கள் எதிரில் பச்சை குழந்தைகள் ஆகிவிடுகின்றனர் – ரவீந்திரநாத் தாகூர்

தாயில் சிறந்தொரு கோயில் இல்லை
பெண் இன்றி பெருமையும் இல்ல, கண் இன்றி காட்சியும் இல்லை
பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்
பெண்ணுக்கு பொன் இட்டுப் பார்
பெண் பாவம் பொல்லாதது
பெண்ணின் கண்ணீர் உலகிலேயே மிக ஆற்றலுள்ள நீர் சக்தி – வில்சன் மிஸ்னர்

பெண்ணாய் பிறப்பதற்கே மாதவம் செய்திருக்க வேண்டும் – தேசிய விநாயகம் பிள்ளை

தாய்க்கு பின்தான் தாரம்
வீட்டுக்கு அலங்காரம் மனையாள்
பிறந்தது முதல் பிரியும் வரை பெண்ணே நீ பெற்ற பல சோதனைகளையும் சாதனைகளாக்க போராட்டங்கள் பல கடந்து பாராட்டுகளை குவிக்கும் போது நெஞ்சில் மிஞ்சுவது ஆனந்தம் மட்டுமே !!!
பெண்மை என்பது மென்மை பறவையின் இறகு கூட தோற்க்கும் தாயின் வருடலில்...பெண்மை என்பது உண்மை பொய்யான பாசங்கள் கூட தோற்க்கும்,தாயின் உண்மையான அன்பில்... பெண்மை என்பது கருணை கடவுள் கூட தோற்றுப்போவான் தாயின் கருணையில்...பெண்மை என்பது பெருந்தன்மை,தெய்வம் கூட மன்னிக்க மறுக்கும் தவறுகளை தாய்மை மன்னிக்கும்...





# பல்சுவை கதம்பம்



## கிளென்சர்

கிளென்சர் முதலில் முகத்தில் மேற்சருமத்தில் படிந்திருக்கும் அழுக்குகளை நீக்க வேண்டும். அதற்கு முதலில் வெதுவெதுப்பான நீரில் முகத்தைக் கழுவ வேண்டும். பிறகு உங்கள் சருமத்திற்கு ஏற்ற கிளென்சரை பயன்படுத்தி வட்ட வாக்கில் முகத்தில் மசாஜ் போல் செய்து அழுக்குகளை நீக்க வேண்டும். பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். நீங்கள் மேக்-அப் அணிந்திருந்தால், முதலில் மேக்கப் ரிமூவரைப் பயன்படுத்தி அதை அகற்ற வேண்டும். அதன் பிறகு, உங்கள் முகத்தில் உள்ள அழுக்குகளை ஃபேஸ் வாஷ் மூலம் அகற்றி முகத்தை சுத்தம் செய்ய வேண்டும்.



## கரும்புள்ளிகளை நீக்கவும்

உங்கள் பிளாக்ஹெட்ஸை அகற்ற நீங்கள் ஒரு பிரித்தெடுக்கும் கருவியைப் பயன்படுத்துகிறீர்கள் என்றால், அதை கவனமாக செய்யுங்கள். உங்கள் விரல்களைப் பயன்படுத்தி கரும்புள்ளிகளைப் பிரித்தெடுக்கலாம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், உங்கள் கைகளை கழுவி, உங்கள் விரல்களை ஒரு டிஷ்யூ அல்லது டாய்லெட் பேப்பரில் மடிக்கவும். காமெடோவைச் சுற்றி உங்கள் விரல்களை வைத்து, கரும்புள்ளிகளை அகற்றவும்.





## எக்ஸ்ஃபோலியேட்

எக்ஸ்ஃபோலியேட் மிக முக்கிய படியாகும். இது முகத்தில் சருமத்துளைகளை அடைத்துக் கொண்டிருக்கும் இறந்த செல்களை நீக்கி சருமத்தை தெளிவுபடுத்தும். சிறந்த எக்ஸ்ஃபோலியேட்டரை தேர்வு செய்து முகத்தில் தடவி மசாஜ் போல் 2 நிமிடங்கள் சீராகத் தேய்க்கவும். அதற்காக அதிக நேரம் செய்யக் கூடாது. இது சருமத்தின் மென்மையை பாதிக்கும். முகத்தை குளிர்ந்த நீரில் கழுவி, இறந்த செல்கள் நீங்கிய பின் முகத்தில் ஏற்படும் பொலிவை நீங்களே உணர்வீர்கள்.

## ஈரப்பதம் மற்றும் மசாஜ்



உங்களுக்கு பிடித்த மாய்ஸ்சரைசரை ஒரு நல்ல அடுக்கில் தடவி, உங்கள் முகத்தை மெதுவாக மசாஜ் செய்யுங்கள். ஏனெனில் இது இரத்த ஓட்டத்தை அதிகரிக்க உதவுகிறது. ஜேட் ரோலர், குவா ஷா கருவி அல்லது உங்கள் விரல்களைப் பயன்படுத்தி உங்கள் முகத்தை மசாஜ் செய்யலாம்.

## ஸ்க்ரப்

சந்தையில் கிடைக்கும் எக்ஸ்ஃபோலியேட்டிங் ஸ்க்ரப்களை நீங்கள் பயன்படுத்தலாம். இருப்பினும் வீட்டில் தயாரிக்கப்பட்ட ஃபேஷியல் ஸ்க்ரப்பைப் பயன்படுத்துவது எப்போதும் நன்மை பயக்கும். காபி மற்றும் அலோ வேரா க்ளியர் ஜெல் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஸ்க்ரப் செய்யலாம்.



## நீராவி

இப்போது உங்கள் முகம் புதிதாக உரிக்கப்பட்டுள்ளது. நீங்கள் இப்போது ஸ்டீமரைப் பயன்படுத்தலாம் அல்லது வீட்டிலேயே இந்த ஸ்டீமரையும் பயன்படுத்தலாம். நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் வெதுவெதுப்பான நீரை ஒரு கிண்ணத்தில் நிரப்பவும். தண்ணீர் கொதிக்காமல் பார்த்துக் கொள்ளவும். நறுமணத்துடன் இருக்க ஏதேனும் நறுமண எண்ணெயையும் ஒரு சொட்டு இதில் சேர்த்துக் கொள்ளலாம். கட்டாயம் இல்லை. முகத்தில் வடியும் வேர்வையை காட்டன் துணி கொண்டு அவ்வபோது துடைத்து விட வேண்டும். அது உங்கள் முகத்தில் வைக்கும் அளவுக்கு குளிர்ச்சியாக இருக்கிறதா என்று சோதிக்கவும். உங்கள் முகத்தில் மெதுவாக தடவுவதன் மூலம் ஐந்து நிமிடங்களுக்கு நீராவியை அனுபவிக்கவும்.



## டோனர்



இது மேலே நீங்கள் செய்த அத்தனை ஸ்டெப்புகளிலும் பெற்ற பலனைப் பாதுகாக்க உதவும் ஸ்டெப்பாகும். ஆம் , உங்களின் சருமத் துளைகளை இறுகச் செய்து அழுக்குகள் உட்புகுந்து முகப்பருக்கள் ஏற்படாமல் இருக்க உதவும். டோனரை பஞ்சில் நனைத்து முகம் முழுவதும் சீராக துடைத்து எடுத்து விடுங்கள். இரண்டு வைப்புகளுக்கு ஒரு முறை புதிய பஞ்சை பயன்படுத்துங்கள்.

## ஃபேஸ் மாஸ்க்



ஃபேஸ் மாஸ்க்கை பயன்படுத்துங்கள். தயிர், தேன் மற்றும் வெண்ணெய் போன்ற பொருட்களைப் பயன்படுத்தி நீங்கள் வீட்டில் தயாரிக்கப்பட்ட ஃபேஸ் பேக்கைப் பயன்படுத்தலாம். இது சீரற்ற சரும நிறத்தை போக்கி ஊட்டச்சத்தை அளிக்கக் கூடிய ஸ்டெப் ஆகும். இதனால் உங்கள் மனமும் ரிலாக்ஸ் ஆகி முகமும் தெளிவாகும். ஃபேஸ் மாஸ்கை பிரெஷில்தான் அப்ளை செய்ய வேண்டும். முகம் முழுவதும் சீராக இந்த மாஸ்கை அப்ளை செய்யுங்கள். கண்கள் மற்றும் வாய்க்கு மிக அருகில் அப்ளை செய்யக் கூடாது. ஃபேஸ் மாஸ்க்கை உங்கள் முகத்தில் 10-15 நிமிடங்கள் விட்டுவிட்டு, ஈரமான துணியால் அகற்றவும்.

## உடல் எடை வேகமாக அதிகரிக்க வேண்டுமா?

உடல் எடை அதிகமாக இருந்தாலும் பிரச்சனை, எடை குறைவாக இருந்தாலும் பிரச்சனை. சீராக உடல் எடையை பராமரிப்பது தான் ஆரோக்கியம். அது என்ன சீரான உடல் எடை? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். சீரான எடை என்றால் உயரத்துக்கு ஏற்ற எடை இருந்தால் போதும். சிலர் உடல் எடையை கூட்டுவதற்கு ஏதோதோ முயற்சிகளை எல்லாம் எடுப்பார்கள். அவர்களில் ஒருவர் நீங்கள் என்றால், இயற்கையான இந்த டிப்ஸை ஃபாலோ செய்து விரைவாக உடல் எடையை கூட்டுங்கள்.

**1. பாதாம் பருப்பு**

டிரைஃப்ரூட்களில் ஒன்றான பாதாம் பருப்பில் நரம்புகளை வலுப்படுத்தும் ஆற்றல் உண்டு. இதில் வைட்டமின் இ சத்து, ஃப்ளேவனாயிட்ஸ், எல் கார்னிடைன் அமினோ அமிலம் மற்றும் நல்ல கொழுப்புகள் நிறைந்துள்ளன. உடல் எடையை கூட்டும் முயற்சியில் இருப்பவர்கள் தினமும் காலை மாலை என இரு வேளைகளிலும் இதனை சாப்பிட்டு வருவது, நல்ல ரிசல்டைக் கொடுக்கும். பாஸ்பரஸ் தாதும் இதில் இருக்கிறது.

**2. வேர்க்கடலை**

உடல் எடையைக் கூட்டும் முயற்சியில் இருப்பவர்கள் முக்கியமாக எடுத்துக் கொள்ள வேண்டிய ஒன்று என்றால் வேர்க்கடலை. நல்ல கொழுப்பு நிறைந்துள்ள வேர்க்கடலையில் பாதாம் பருப்புக்கு இணையான சத்துக்கள் குவிந்து கிடக்கின்றன. லோ பட்ஜெட் பாதாம் என்று கூட இதனை அழைக்கலாம். அதிக விலை கொடுத்து பாதாம் வாங்க முடியாதவர்கள் வேர்கடலையை டையட்டில் சேர்த்துக் கொள்ளலாம்.

**3. பிஸ்தா**

வைட்டமின்கள் பி, இ ஊட்டசத்துக்கள் இருக்கும் பிஸ்தாவில் தாமிரம், மாங்கனீசு, பொட்டாசியம், கால்சியம், இரும்புச்சத்து, மெக்னீஷியம் உள்ளிட்டவையும் உள்ளன. இதனை தினமும் காலையில் எழுந்தவுடன் வெறும் வயிற்றில் சாப்பிட வேண்டும். நாள்தோறும் மூன்று முதல் 4 பிஸ்தா பருப்புகளை சாப்பிடுங்கள்

**4. உலர் திராட்சை**

ஆன்டிஆக்ஸிடன்டுகளும், உடலுக்கு தேவையான கலோரிகளையும் கொண்டிருக்கிறது உலர் திராட்சை. இரும்புச் சத்துகளின் குவியலாக இருக்கும் இதனை உடல் எடையை கூட்டுபவர்களுக்கு சிறந்த ஒன்று. சரியான அளவில் எடுத்து உணவில் சேர்த்துக்கொள்ளும்போது, உங்களின் உடல் எடை விரைவாக அதிகரிக்கும்.

சில நேரங்களில் நாம் எடுக்கும் தவறான முடிவுகள் நம்மை சரியான பாதையில் செல்ல கற்றுக்கொடுக்கின்றன!



# இலங்கை கலைஞர்களுக்கும் வாய்ப்பளிப்பேன் நடன இயக்குனர் கலா மாஸ்டர் உடனான சிறப்பு நேர்காணல்



**கேள்வி : உங்களுடைய தாயகத்தின் வருகை என்பது எப்படியிருக்கின்றது, புத்துணர்வை வந்திருக்கின்றதா?**

பதில் : கண்டிப்பாக எனக்கு ஒரு 10 வயது குறைந்தது போன்ற ஒரு உணர்வு மக்களை பார்த்ததில். ஏனென்றால் எனக்கு நிறைய தமிழ் ரசிகர்கள் தான் இருக்கின்றார்கள். ரசிகர்கள் என்பதை விட அவர்களின் அன்பு பாசத்தினால் அவர்களுடன் நான் ஒரு குடும்ப நண்பராகிவிட்டேன். கனடா மற்றும் இங்கிலாந்தில் எல்லாம் நான் டான்ஸ் கிளாஸ் வைத்திருக்கின்றேன் ஆனால் அனைத்து இடங்களிலுமே தமிழர்கள் தான் எங்களிடம் டான்ஸ் பழகுகின்றார்களே தவிர ஒரு வெளிநாட்டவரையும் நான் சேர்த்துக்கொள்வது இல்லை. அனைவருமே இலங்கைத் தமிழர்கள் மட்டும் தான். எனவே அவர்களுடன் என்னை தொடர்புபடுத்தும் பொழுது நான் மிகவும் நெருங்கிய நண்பராக இருக்கின்றேன். நான் சிறிலங்காவிற்கு வருகின்றேன் என்றதும் லண்டன் கனடா எல்லா இடங்களிலும் ஐயோ நான் உங்களை ரொம்ப மிஸ் பண்றன் நான் சிறிலங்கா போறேன் உங்க ஊருக்கு போறேன் என்று சொல்லும் போது அவர்களை நான் ரொம்ப மிஸ் பன்றன். நிறைய சூட்டிங்கிற்கு இங்கே வந்திருக்கிறேன். ஆனால் முதன் முறையாக குடும்பமா நிறைய பார்க்க வேண்டிய இடத்திற்காகவே இங்கு வந்தேன்.

**கேள்வி : நீங்கள் 4 ஆயிரம் பாடல்களுக்கு மேல் ஒரு நடன இயக்குனராக கடமையாற்றியிருக்கின்றீர்கள் அதில் உங்களுடைய முக்கியமான பங்களிப்பு இருக்கின்றது. அதனடிப்படையில் தமிழர்களாகிய நாங்களும் பெருமை கொள்ளுகின்றோம். எனவே கூடுதலாக பாரம்பரிய நடனக்கலைகள் நலிவடைந்துவருவதால் வெஸ்டன் கூடுதலாக தலை தூக்குகின்றது இதில் பாரம்பரிய கலையையும் இந்த நடனக் கலையையும் வைத்து நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?**

பதில் : எத்தனை வெஸ்டன் வந்தாலும் எங்களுடைய நடனம் விட்டுப்போகாது. ஏனென்றால் நான் பரதத்தில் இருந்து வந்ததால் தான் 1980 இல் வந்திருந்தும் இன்னும் 2022 வரை இருக்கின்றேன் என்றால் என்னுடைய பரதம் இருப்பதால் தான் நான் இத்தனை வருடங்களாக இருக்கின்றேன். இதே நீங்கள் சினிமாவில் வெஸ்டன் டான்ஸ் ஆடியிருந்தால் இத்தனை வருடங்கள் உங்களால் வாழ முடியாது. மற்றும் பற்றிக்குலரா நான் சொல்லுவேன் பரதம் வந்து ரொம்ப தாசி இருக்கிறது கேரளாவில் தான். அதற்கு அடுத்தது என்று பார்த்தால் எங்களது இலங்கை தான். இங்கு நான் இரண்டு மூன்று இடங்களுக்கு போகும் பொழுதும் எல்லா குழந்தைகளும் பரதநாட்டியம் ஆடும்பொழுது எனக்கு ரொம்ப சந்தோசமா இருந்தது. அதை இன்னும் கொஞ்சம் ரீச் பன்ன வேண்டும். நிறைய பேரின் பங்களிப்பு இருக்கின்றது.

ஆனால் அது எப்பொழுதும் எம்மை விட்டு போகாது. ஏனென்றால் பரதம் கத்துக்கிட்டா எல்லா நடனமும் ஆடலாம். வெஸ்டன் ஆடினா அது எங்களது பேசிக்கிடையாது. அதாவது வன் டூ திரி போர் இல்லாமல் வேற இங்கிலிசில் பேசுவது போன்று ஆகிடுமே தவிர பேசிக் பரதம் தான் இன்போர்ட்டன்ட். அதுக்கு அழிவே கிடையாது கொஞ்சம் பாங்கில் இருக்கின்றது ஆனால் எல்லாருமே அதை போர்ஸ் பண்ணி பண்ணினாங்கள் என்றால் அது கண்டிப்பாக இருக்கும். இதே கேரளாவில் பார்த்தால் ஒரு வீட்டில் கண்டிப்பாக இரண்டு பேராவது பரத நாட்டியம் கத்துக்கிட்டிருப்பாங்க. அதே மாதிரி தான் இங்கும் நான் பார்த்த நிறைய இடங்களில் எல்லாரிடமும் கேட்டாலும் நான் பரத நாட்டியம் கத்துக்கிறேன். பரத நாட்டியம் கத்துக்கிறேன் என்று தான் சொல்றாங்கள். ஏனென்றால் இங்கே வெஸ்டன் டான்ஸ்க்கு பெரிசா இடமில்லை. எனவே 100 வீதம் பாரம் பரியம் அழியாது. அந்த பாரம்பரியத்தை கொஞ்சம் பாக்கில் தள்ளுறாங்கள் நாங்கள் புஸ் பண்ணிக்கொண்டே போனால் போதும்.

**கேள்வி : நீங்கள் கூறுவதைப் போன்று பரதநாட்டியத்தை இலங்கையிலே சந்தைப்படுத்துவது என்பது மிகவும் ஒரு கடினமாக இருக்கின்றது. அதற்குரிய பொன்சர்ஸ் எல்லாம் வருவது குறைவு. ஆனால் இந்தியாவை பொறுத்தவரையில் அதற்குரிய ஊக்குவிப்பு இருக்கின்றது. ஆகவே நீங்கள் தற்பொழுது இங்கு வந்து பல கலைஞர்களை இலங்கையிலே சந்தித்திருக்கின்றீர்கள். எனவே அவர்கள் இந்த நடனக் கலையை வளர்ப்பதற்கு உங்களுடைய முயற்சிகள் எப்படியிருக்கும்?**

பதில் : நான் உங்களிடம் நிறைய சொல்லியிருக்கிறேன் எப்பவுமே எல்லாருமே பேசிக்கா சும்மா வந்தோம் ஆடினோம் என்று இருக்க கூடாது. ஏனென்றால் அது நிரந்தரம் இல்லை. நம்ம ஒரு இதில இருந்து படிக்க ஆரம்பிச்சா அதனுடைய நிரந்தரம் நம்ம வாழ்க்க முழுக்க நம்ம கூடவே இருக்கும். நம்ம வாழ்க்கைல கூட வார ஒன்று கலை. பாட்டாக இருக்கட்டும் நடனமாக இருக்கட்டும் எதா இருந்தாலும் இறப்பு வரை கலை எங்களுடனே தான் இருக்கும். வேற எதனையுமே நம்ம கொண்டு போவது கிடையாது. ஆனால் கலையை நாங்க கொண்டு போவோம். நான் ஒரு டான்சராக இருக்கலாம் ஒருவர் சிங்கராக இருக்கலாம் ஸ்போரட்ஸா இருக்கலாம் அந்த கலை தான் எங்கள் கூடவே இருக்கும். எனவே இங்கே வெஸ்டன் சினிமாடிக் டான்ஸ் கம்மியா இருக்கு என்னட நிறைய பேர் கேட்டாங்க அவங்களிடம் கண்டிப்பா டான்ஸ் கிளாஸ் வைக்கிறேன் என்று மற்றும் கஸ்டப்படுகின்றவர்களுக்கு எல்லாம் நான் ஒன்லைன் கிளாஸ் மாதிரியும் வைக்கிறன் என்றேன். ஏனென்றால் நான் எல்லா இடங்களுக்கும் போக முடியாது அதனால ஒன்லைன் கிளாஸஸ் மூலமா மக்சிமம் என்னால முடிந்ததை நான் உங்களுக்கு பிரியாவே பண்றன் என்று சொல்லியிருக்கிறேன். ஏனென்றால் எங்களால முடிந்த விடயத்தை நாங்க பண்ண முடியும். எனவே அப்படியான என்னால முடிந்த ஒப்பயூனிட்டியை கொடுப்பேன். ஏனென்றால் நான் மாநாட மயிலாட நிகழ்ச்சி பண்ணும் போது கூட சிறிலங்கா கம்பிலுக்கு ஒரு புரோக்கிராமிங் கொடுத்து டொப் போர் வரைக்கும் வந்து இப்ப பிரான்ஸில் அவர்களின் டான்ஸ் கிளாஸ் ஓகோ என்று நல்லா போய்க்கொண்டிருக்கு. அப்படி கண்டிப்பா நாங்க ஒப்பயூனிட்டி கொடுப்போம். எல்லாருக்கும் நாங்க ஓப்பர் யூனிட்டி கொடுக்கமாட்டோம் அவர்களின் திறமைக்கு மட்டும் தான் நாங்க ஒப்ப யூனிட்டி கொடுப்போம். ஒப்பயூனிட்டி வருது என்றவுடன் டான்ஸ் வராம எனக்கு டான்ஸ் கத்துக்கொடுங்க என்றால் கொடுக்க முடியாது. நீங்கள் எந்தளவுக்கு கார்ட் வேக் பண்றீங்களோ அந்தளவுக்கு கண்டிப்பா ஒரு சக்சஸ் கிடைக்கும்.

**கேள்வி : இதிலே நடனக்கலை என்னும் பொழுது பரத நாட்டியம் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆனால் திரைப்படத்தை பார்க்கின்ற பொழுது கூடுதலாக அது சந்தைப்படுத்தல் நிகழ்வாகத்தான் அது இடம்பெறுகின்றது. ஆனால் திரைப்படங்களிலே கூடுதலாக கமலஹாசன் நடிக்கின்ற பொழுது அல்லது மூத்த கலைஞர் நடிக்கின்ற பொழுது கூடுதலாக பரத நாட்டியங்கள் அதனுள் புகுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் இலங்கையை பொறுத்தவரையில் அவ்வாறான சூழல் இல்லை என்பதே நிலைப்பாடு. ஆனால் சந்தைப்படுத்தல் வருகின்ற பொழுது பரதநாட்டிய கலை அழிந்துபோவதற்கான நிலைமை இருக்கின்றதல்லவா?**

பதில் : இல்லை கண்டிப்பாக இருக்காது. ஏனென்றால் கமலஹாசன் சலங்கை ஒலி என்று ஒரு படத்தை பண்ணினார் எத்தனையோ பரதநாட்டியத்தை கொண்டுவந்தார். அவரும் சரசா என்று சொல்லி பரதநாட்டியம் கத்துக்கிட்டு தான் வந்தாரு எப்பவுமே பாரம்பரியம் அழியாது. வாழ்க்கையில் எது இருந்தாலும் சரி பரதம் என்பது அழியாது ஆனால் ஒரு ரீச் இல்லையே தவிர நீங்கள் எந்த இடத்திற்கு போனாலும் சரி. இப்ப சோபனாவை எடுத்து பார்த்தா இன்னும் நம்பர் வன்னாக இருக்கிறாங்க. நிறைய சோ பண்ணிக்கிட்டு இருக்காங்க. அதைப்போன்று நம்மலுடைய கிராமியப்பாடல் இப்பொழுது சினிமாவை எடுத்தால் அதிலிருக்கும் ஒவ்வொரு நடனமும் அந்த பாட்டுக்கு ஏற்ற மாதிரி மாறுகின்றதே தவிர அதிலிருக்கின்ற எல்லா மூமன்டுமே நம்மளுடைய பரதத்தில் இருக்கின்ற மூமன்டுகள் தான்.

**கேள்வி:பரதநாட்டியத்தைபொறுத்தவரையிலே கூடுதலாக பாலியலை தூண்டும் விதத்தில் பரத நாட்டியம் அமைவதில்லை. ஆனால் வெஸ்டன் டான்சை பார்க்கின்ற பொழுது திரைப்படங்களிலே சந்தைப்படுத்தலுக்காகவும் அதனை மேற்கொள்கின்றார்கள். அதை பார்ப்பவர்களின் கண்ணோட்டம் வேறு கண்ணோட்டமாக இருக்கின்றது. பல ரூமெட்டிங் சம்மந்தமாக பாடல் காட்சிகளுக்கு நீங்கள் காட்சியமைத்திருக்கின்றீர்கள் அவ்வாறிருக்கும் பொழுது நடிகர்களுடைய மனோநிலை வேறுபடும் என்ற ஒரு கருத்தை பெண் ஆய்வாளர்கள் கூட முன்வைத்திருக்கின்றார்கள். சர்ச்சைக்குரிய விடயமாக இருக்கின்றது இதைப்பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

பதில் : என்னைப் பொறுத்தவரை பார்க்கின்ற பார்வை நல்லா இருந்தால் எதுவுமே இல்லை. ஒரு சின்ன உதாரணம் நான் சொல்லுகின்றேன் காதலன் என்னும் படம் அதில் பிரபுதேவா ஆடினார் அதை பலர் கிரிட்டிசைஸ் பண்ணினார்கள் அதுக்கு நான் பதிலளித்தேன். கையிலே முடி எடுக்கல என்று சொல்லும் போது உன்னுடைய பார்வை நடனத்தை தவிர வேறு எங்கு போகிறது. நான் கேட்டதற்கு பெரிய பட்டிமன்றமே நடந்தது அந்த பட்டிமன்றத்தில் நான் கேட்ட கேள்விக்கு அவர்களால் பதில் சொல்லவே முடியாது. ஏனென்றால் இப்போ நான் ஆடுகின்றேன் எனக்கு கல்யாணம் ஆகிவிட்டது குழந்தை இருக்கிறது ஆனால் நான் டூயட் சோங்கில் என்னுடைய அசிஸ்டன்ட் உடன் நான் கட்டிப்பிடித்து ஆடுவேன். ஆனால் எனக்கு தெரியாது அது இரண்டு பேர் டூயட் ஆடுகின்றார்கள் என்றால் அவர்கள் தனியாக ஆடவில்லை கிட்டத்தட்ட 120 பேருக்கு நடுவில் ஆடுகின்றார்கள் அப்போது வேற நினைப்பே வராது அவர்களுக்கு இட்ஸ்ச ஜோக் அவ்ளோ தான். இப்ப நீங்க கொஸ்பிட்டலுக்கு போறீங்க ஒரு ஆணுக்கு கிளீன் பண்ணனும் என்றால் அங்கே நெர்ஸ் தானே கிளீன் பன்றா அப்பொழுது அது உங்களுக்கு தப்பான விடயமாக தோன்றாதே. சினிமா பார்க்கின்ற பார்வை நல்லா இருந்தா எதுவுமே கிளாமர் கிடையாது. நாங்க வடிவேலுவையும் கட்டிப்பிடித்து ஆடுவோம் ஹீரோவையும் கட்டிப்பிடித்து ஆடுவோம் சாதாரணமான ஆளா இருந்தாலும் கட்டிப்பிடித்து ஆடுவோம் ஆனால் எங்களுடைய மனம் சுத்தம். எங்களுக்கு அது கலை இந்த பாட்டு நல்லா வரனும் இந்த டான்ஸ் நல்லா வரனும் அப்படித்தான் அந்த காரெக்டர் ஒடவே நாங்க இன்வோல் ஆகின்றோம். அந்த சோங் சிட்டிவிசனோட இன்வோல் ஆகின்றோம். டாரக்டர் கொடுக்கின்ற சிட்டிவிசனோட போயிடுவோமே தவிர எந்த நடிகை நடிகர்களுக்குமே வேற எந்த நினைப்புமே வராது.

**கேள்வி : இந்திய பத்திரிகையான விகடன் மற்றும் ஏனைய பத்திரிகைகளிலே அவ்வாறு சில சர்ச்சைகள் வருவதாக செய்திகள் வருகின்றதே?**

பதில் : மீடியாவில் சொல்பவர்கள் சொல்வார்கள். நான் கிட்டத்தட்ட சினிமாவில் 40 வருடங்களாக இருக்கின்றேன். 40 வருடங்களாக எனக்கு தெரியாத விடயமா. இருக்கும் ஆனால் கிளாமர் ரெஸ் போட்டால் அதை போடக்கூடாது என்று சொல்லுவார்கள் தற்பொழுது அப்படியெல்லாம் இல்லை. அந்த காலத்தில் பார்த்தால் ஜோதி லக்மிக்கும் தனி டான்ஸ் இருக்கு டிஸ்கோ சாந்திக்கும் தனி டான்ஸ் இருக்கு. இப்ப அந்த மாதிரி கிளாமர் டான்ஸர் இருக்காங்களா இல்லையே. ஹீரோயின்ஸ்ம் ஆடுறாங்க எல்லாமே பண்றாங்க. இப்ப யாருமே கிளாமர் கிடையாது எப்பவுமே நான் சொல்லுறது என்ன என்டா பார்க்கின்ற பார்வை நன்றாக இருந்தால் எந்த நடனத்தையும் நீ ரசிக்கலாம். பரதம் மட்டும் இல்லை எந்த நடனத்தையும் ஒரு சின்ன குழந்தை ஆடுவதை ரசிக்கின்ற தன்மை இருந்தால் எங்களது கண்ணுக்கு வேற எதுவுமே தெரியாது.

**கேள்வி : இந்த நடனத்துறையிலே நீங்கள் இருக்கின்ற பொழுது உண்மையிலே ஆரம்பத்தில் எல்லோருக்கும் ஒரு கசப்பான அனுபவத்தை கொடுத்திருக்கும். அல்லது உங்களுடைய முன்னேற்றகரமான பாதை உங்களுக்கு எப்படியிருக்கின்றது?**

பதில் : எனக்கு ஒன்றுமே இல்லை. ஏனென்றால் எனக்கு நான் ஒரு கோடு போட்டுக்கொண்டேன். என்னோட லைப் இப்படித்தான் இருக்கனும் நான் எந்த கம்பனியும் ஏறி இறங்க மாட்டேன் நான் செய்யிற தொழிலை படத்தை பார்த்து எனக்கு சான்ஸ் வந்தால் போதும். இப்ப என்னுடைய பாக்கிரவுண்ட் பெரிய பாக்கிரவ்ன்ட் ரகுமாஸோட மச்சினிச்சி நான். ரகுமாஸோட பாக்கிரவுன்டில நான் சினிமாவுக்கு வரல. அவர்கிட்ட நான் அசிஸ்டன்ட் ஆக இருந்தன் என்னுடைய டாலன்ஸை பார்த்து பாலச்சந்தர் சேர் அவருடைய டான்ஸை எனக்கு காமிச்சார். நான் இப்படித்தான் இருப்பன் நான் அலோ பன்னாம எதுவுமே நடக்காது உலகத்தில் எனக்கு படம் வந்தா வரட்டும் இந்த பாட்டு வேண்டாமா வேண்டாம் விடு. ஆனால் நான் நம்பிக்கை வைத்தது என்னுடைய நடனத்தில் மட்டும் தானே தவிர வேற எதுலையுமே இல்லை. நான் பெரிய ஹீரோவுக்கு தான் டான்ஸ் கத்துக்கொடுப்பேன் என்று சொல்லமாட்டன். எனக்கு யார் பெர்ஸ்ட் படம் கொடுக்கிறாங்களோ அவங்களுக்கு தான் நான் சூட்டிங் பண்ணுவேன். அப்படி செய்திருந்தால் நான் பெரிய பெரிய ஹீரோவுக்கு இன்னும் நிறைய படங்கள் பண்ணியிருப்பேன் அப்படிகிடையாது. சின்னப் படமா இருந்தாலும் யார் பெர்ஸ்ட் கொடுக்கிறாங்களோ அவங்களுக்கு தான் பண்ணுவேன். ஆனால் கஷ்டங்கள் இருந்தது. நான் பன்ற டைம் கேர்ல்ஸ் ரொம்ப கம்மி. ஆனால் அதில் வேற போராட்டங்கள் எனக்கு கிடையாது. ஒரு பாட்டு பண்ணினா ஒரு மூன்று மாசத்திற்கு அப்பறம் தான் அடுத்த பாட்டு வரும். அதில் படத்தில் புதுப்புது அர்த்தங்கள் கொடுத்தேன். அதில் இரண்டு பாட்டு தான் வந்தது. அப்பறம் 6 மாதம் வேலை இல்லாமல் இருந்தேன். இப்படி ரொம்ப கஷ்டப்பட்டேன். அதற்கு பிறயு மனசுக்குள் மத்தாப்பு என்ற ரொமான்ஸ் பாட்டு வந்தவுடன் அதனால் எனக்கு படங்கள் வர ஆரம்பித்தது. அப்படி நான் ஸ்டெப் பை ஸ்டெப்பாகத்தான் வந்தேனே தவிர எடுத்த உடனே கைட்டுக்கு நான் போகல. ஆனால் இப்ப இருக்கின்ற கலைஞர்களுக்கு ரொம்ப வசதி.

**தொடரும்...**

**இரணியன்**



# விளையாட்டு செய்திகள்





## ஷேன் வார்னிடமிருந்து வந்த கடைசி மெசேஜ், அதை ஒருபோதும் அழிக்க மாட்டேன் –கில்கிறிஸ்ட் உருக்கம்

தாய்லாந்தில் மாரடைப்பால் இறப்பதற்கு சில மணிநேரங்களுக்கு முன்பு மறைந்த ஷேன்வோர்ன் தனக்கு அனுப்பிய மெசேஜை ஆடம் கில்கிறிஸ்ட் வெளிப்படுத்தியுள்ளார். உலகம் முழுவதிலுமிருந்து சோகத்தை வெளிப்படுத்திய வோர்னின் அதிர்ச்சி மரணம் ஆஸ்திரேலிய அணியினர் தாங்கள் ஒன்றாகக் கழித்த நேரத்தை நினைவு கூரச் செய்துள்ளது.

இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு ஷேன்வோர்னுடன் கில்கிறிஸ்ட் பேசியுள்ளார். மறைந்த மார்ஷீக்கு அஞ்சலி செலுத்துவதற்காக கில்கிறிஸ்ட் தயாரித்த வாழ்த்துரையை புகழ்ந்து அஷேன்வோர்ன்வருக்கு டெக்ஸ்ட் மெசேஜ் அனுப்பியுள்ளார்.

இந்நிலையில் ஏபிசி நியூஸ்-க்காக கில்கிறிஸ்ட் கூறும்போது, "ஒரு வாரம் முன்புதான்ஷேன்வோர்ன் பேசினேன். அவரிடமிருந்து அருமையான மெசேஜ் ஒன்று வந்தது. அவர் இறப்பதற்கு 8 மணி நேரம் முன்னதாக இந்த மெசேஜை அவர் அனுப்பியிருக்கலாம். என்னுடைய எனது நெருங்கிய நண்பர்கள் என்னை 'சர்ச்' என்று அழைப்பார்கள். இதனால் என்னை செல்லமாக எரிக் கில்சர்ச் என்றே சிலர் அழைப்பார்கள். ஷேன்வோர்னும் என்னை 'சர்ச்சி' என்றே அழைப்பார். அவர் அப்படி அழைக்கும்போது நட்பின் நெகிழ்ச்சி இருக்கும்.

அவர் தன் மெசேஜில், 'சர்ச்சி (கில்கிறிஸ்ட்), மார்ஷீக்கு நீ செய்த அஞ்சலி அருமை' என்றார். என்னுடைய குழந்தைப் பருவ ஹீரோ மார்ஷீக்கு நெருக்கமாக நாம் இருவருமே வரவில்லை. வெல் டன் சார் என்று எனக்கு கடைசியாக மெசேஜ் செய்திருந்தார். அதுதான் கடைசி தொடர்பு. அந்த டெக்ஸ்ட் மேசேஜை நான் ஒருநாளும் டிலீட் செய்ய மாட்டேன்.



ஷேன்வோர்ன்பந்து வீச்சுக்கு விக்கெட் கீப்பிங் செய்ததே எனக்கு மிகப்பெரிய பெருமையாக உள்ளது. ஒரு மாஸ்டர் பணி செய்யும் போது அவரை அருகில் இருந்த இரண்டு பாக்கியசாலிகள் நானும் இயன் ஹீலியும்தான். அவர் தொப்பியைக் கழற்றி விட்டால், பந்து வீச வரப்போகிறார் என்று அர்த்தம். அதன் பிறகு அவர் செய்யும் அட்டகாசம் ஒரு நாடகம்தான். அவர் திரைப்பட இயக்குநர் போல்தான் செயல்படுவார். ஸ்பீல்பர்க் போன்ற ஆளுமை ஷேன் வார்ன். ஷேன் வார்னுடன் கீப்பர்-பவுலர் உறவே ஒரு தனி ரகம். மறக்க முடியாதது அது. " இவ்வாறு கூறினார் கில்கிறிஸ்ட்.

## யாராவது கனவுனு சொல்லுங்க பிளிஸ்..! வோர்ன் மகளின் உருக்கமான பதிவு

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஷேன் வோர்ன் மரணமடைந்த நிலையில். அவரது நினைவாக அவரது செல்ல மகள் சம்மர் உருக்கமான பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

52 வயதான ஷேன் வோர்ன் தாய்லாந்துக்கு இன்பச் சுற்றுலா சென்ற நிலையில் காலமானார். இது தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் ஷேன் வோர்னின் மகள் வெளியிட்டுள்ள பதிவில், தந்தையின் நினைவில் வாடுவதாகக் குறிப்பிட்டுள்ளார். எப்போது கேட்பேன் இது எல்லாம் கனவு, தனது தந்தைக்கு ஒன்றும் இல்லை என்று யாராவது என்னிடம் சொல்ல மாட்டார்களா? இது உண்மையாக இருக்கக் கூடாது. வாழ்க்கை இவ்வளவு கொடூரமாக இருக்கும் என நான் நினைக்கவில்லை. இனி உங்களுடைய மெல்லிய குரலை நான் என்று கேட்பேன்? செல்லம் எல்லாம் சரி ஆயிடும் என்று நீங்கள் சொல்வதை இனி நான் எப்போது கேட்பேன்.

**கடைசி சந்திப்பு**

**இனி நீங்கள் சொல்லும் குட் மோர்னிங், குட் நைட்டை நான் எப்படிக் கேட்பேன். கடைசியாக உங்களைப் பார்த்த நிகழ்வு என் வாழ்நாள் முழுவதும் நீடித்திருக்கும். கடைசியாக நாம் சேர்ந்து ஒன்றாக பாடலுக்கு ஆடினோம். அப்போது தான் உங்களை நான் கடைசியாக பார்ப்பேன் என்று கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை அப்பா.**

**இறுதி மூச்சு**

**உங்களுடைய சிரிப்பை கேட்க, மீண்டும் உங்களின் குரலைக் கேட்க, மீண்டும் நீங்கள் என்னை பாசத்துடன் அரவணைக்க நான் என்ன வேண்டும் என்றாலும் செய்வேன். நீங்கள் இறுதி மூச்சு விடும் போது உங்கள் கையைப் பிடித்துக் கொண்டு எல்லாம் சரி ஆயிடும். எனக்கு உங்களை பிடிக்கும் அப்பா என்று என்னால் சொல்ல முடியவில்லையே.**

**மீண்டும் வருவேன்**

**நான் உங்களுடன் இருந்திருக்கக் கூடிய நேரம் கொள்ளையடிக்கப்பட்டு விட்டது. மீண்டும் என்னுடன் வாருங்கள் அப்பா.. நான் சாகும் வரை என் இதயத்தில் என்றும் நீங்கள் இருப்பீர்கள் அப்பா. உங்கள் நினைவு என்றும் இருக்கும். உங்களைக் காண, உங்களைத் தேடி நான் வருவேன், உங்களை நான் பெருமைப்படுத்துவேன். நீங்கள் எப்படி இருந்தாலும், நீங்கள் தான் என் தந்தை. லவ் யூ, டாடி..**





## கிரிக்கெட் விதிகளில் அதிரடி மாற்றங்கள்..!

கிரிக்கெட் ஆட்டமுறையில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான புதிய விதிகளை அறிவித்திருக்கிறது மெரில்போர்ன் கிரிக்கெட் கிளப். இந்தப் புதிய விதிமுறைகள் அனைத்தும் வரும் ஒக்டோபர் 1-ம் திகதியிலிருந்து முழுமையாகக் கடைப்பிடிக்கப்படும் எனத் தெரிகிறது. பிடியெடுப்பில் கொண்டுவரப்பட்டுள்ள மாற்றம். மன்கட் முறையை அங்கீகரித்துள்ளது. அகலப்பத்தை அறிவிப்பதில் மாற்றம். எச்சிலுக்குத் தடை எனப் பல்வேறு புதிய விதிகளின் தொகுப்பு இதோ...

நான்-ஸ்ட்ரைக்கர் எண்டில் உள்ள துடுப்பாட்ட வீரரை மன்கட் (**Mankad**) செய்வது இனி ரன் அவுட் எனக் கருதப்படும் என அறிவித்திருக்கிறது **MCC**. இதை விதி 41-இல் (நியாயமற்ற ஆட்டம்) இருந்து விதி 38-க்கு (ரன் அவுட்) மாற்றி உறுதிப்படுத்தியுள்ளது. "இந்த முறையில் ஆட்டமிழக்கச் செய்யும் பந்து வீச்சாளரை வில்லன்போல கருதும் வழக்கம் உண்டு. ஆனால் இதுவும் ஒரு நியாயமான முறையே" என்று இதற்கான விளக்கத்தைக் கொடுத்துள்ளார் **MCC** கிளப்பின் விதிகளை நிர்வகிக்கும் குழுவில் உள்ள ஃப்ராசேர் ஸ்டீவார்ட். முன்பு பிடியெடுப்பு முறையில் ஒரு துடுப்பாட்ட வீரர் ஆட்டமிழக்கும்போது அந்த இரு துடுப்பாட்ட வீரர்களும் பாதி பிட்சைக் கடந்திருந்தால் புதிய துடுப்பாட்ட வீரர் நான்-ஸ்ட்ரைக்கர் எண்டிற்குச் சென்றுவிடுவார். ஆனால் அதற்கு இப்போது வழியில்லாமல் செய்துவிட்டது புதிய விதி. அதாவது விக்கெட் விழுந்த பந்தில். கேட்ச் பிடிக்கும் முன்னரே அந்த இரு துடுப்பாட்ட வீரர்களும் பாதி பிட்சைக் கடந்து இருந்தாலும் அடுத்த பந்தைச் சந்திப்பது புதிய துடுப்பாட்ட வீரரே! வழக்கமான விதிமுறைப்படி. ஓவரின் கடைசிப் பந்துக்கு மட்டும் இதிலிருந்து விதிவிலக்கு உண்டு. ஆட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது இரண்டு அணிகளில் ஏதேனும் ஒரு அணிக்கு களத்தின் வெளியில் இருந்து ஒரு நபராலோ. விலங்கு அல்லது வேறு ஏதேனும் ஒரு பொருளாலோ இடையூறு ஏற்பட்டால் அந்தப் பந்து கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாது. அதேபோல டெலிவர் ஸ்ட்ரைடிற்கு வருவதற்கு முன்பே பந்து வீச்சாளர் துடுப்பாட்ட வீரரை (ஸ்ட்ரைக்கர்) ரன்-அவுட் செய்ய முயன்றால் அதுவும் இறந்த பந்தாக கருதப்படும். இது மிக அரிதாகவே நடக்கும் ஒன்று. மேலும் ஒரு பந்தைச் சந்திக்க பிட்சை விட்டு துடுப்பாட்ட வீரர் முழுமையாக வெளியே சென்றுவிட்டால் அதுவும் இறந்த பந்து என நடுவரால் அறிவிக்கப்படும்.

ஒரு துடுப்பாட்ட வீரர் பந்தைச் சந்திக்கும் போது களத்தடுப்பில் ஈடுபட்டுள்ள அணி நியாயமற்ற முறையில் நகர்ந்து இடையூறு செய்தால் அப்பந்து இறந்த பந்தாக மட்டும் இதுவரையில் கருதப்பட்டது. ஆனால் அது துடுப்பாட்ட வீரர் ஆடும் நல்ல ஷாட்டையும் வீணாக்குவதால் பெனால்டியாக 5 ஓட்டங்கள் துடுப்பாட்ட அணிக்கு அளிக்கப்படும் எனப் புதிய விதி கூறுகிறது. இதுவரையில் களத்தடுப்பு அணியில் காயப்பட்டும் வீரர்களுக்கு மாற்றாகக் களமிறங்கும் சப்ஸ்டியூட் வீரர்கள் பிடியெடுப்போ அல்லது ரன்-அவுட்டோ செய்தால் அது அவரின் கணக்கில் (கரியர் நம்பர்ஸ்) எடுத்துக்கொள்ளப்படாமல் இருந்தது.

இனி அவர்கள் பங்களிப்பது அவர்களையே சேரும். தற்போதைய டி20 யுகத்தில் பெரும்பாலான துடுப்பாட்ட வீரர்கள் பொறுமையாக தங்களது ஸ்டான்சில் நின்று ஆடுவதில்லை. பந்து வீச்சாளர்களை குழப்புவதற்காகவும். கடினமான பந்தைச் சுலபமாகக் கையாள்வதற்காகவும். துடுப்பாட்ட வீரர்கள் தங்களின் பொசிஷனை மாற்றிவாறே நகர்ந்து செல்கின்றனர். அதாவது. விக்கெட்டை விட்டு விலகுவது. முன் செல்வது எனப் பல சாகசங்களைச் செய்கின்றனர். இதைக் கருத்தில் கொண்டு. பந்து வீச்சாளர் ரன்-அப் தொடங்கிய பிறகு பேட்ஸ்மேன் நின்ற இடத்தைக் கணக்கு வைத்து. அதிலிருந்து விலகிச் செல்லும் பந்து அகலப்பந்து என்று புதிய வீதியில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. கொரோனா லொக்டௌனுக்குப் பிறகிருந்தே பந்தை ஷைன் செய்வதற்கு எச்சில் பயன்படுத்த வீரர்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது **MCC**-யின் ஆய்வில் எச்சில் பயன்படுத்துவது பந்தின் ஸ்விங்கிற்கு எந்த வகையிலும் உதவாது என்றும் வியர்வை கொண்டு பாலிஷ் செய்வதே நல்ல பலனைக் கொடுக்கிறது என்றும் தெரியவந்துள்ளது. எனவே எச்சில் பயன்படுத்துவது பந்தைச் சேதமாக்கும் செயல் என இனி கருதப்படும்.



# உலக பார்வை



## உக்ரைன் ஜனாதிபதிக்கு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடமிருந்து அழைப்பு

கனடிய நாடாளுமன்றத்தில் உரையாற்ற உக்ரைன் ஜனாதிபதி செலன்ஸ்கிக்கு கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அழைப்பு விடுத்துள்ளார். உக்ரைன் மீது ரஷ்யா 14ஆவது நாளாகவும் போர் தொடுத்து வருகிறது. தலைநகர் கீவ் உட்பட நாட்டின் கிழக்கு மற்றும் மத்திய பிராந்தியங்களில் உள்ள நகரங்களில் ரஷ்ய விமானங்கள் இரவில் குண்டுவீசி தாக்குதல் நடத்தின. ரஷ்யாவின் தாக்குதலால் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 20 லட்சம் பொதுமக்கள் உக்ரைனில் இருந்து வெளியேறியுள்ளனர். இந்த நிலையில், கனடாவின் நாடாளுமன்றத்தில் உரையாற்ற உக்ரைன் ஜனாதிபதி செலன்ஸ்கிக்கு கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அழைப்பு விடுத்துள்ளார்.



ஜனாதிபதி செலன்ஸ்கியை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அழைப்பு விடுத்துள்ளார். இது குறித்து பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளியிட்ட டுவிட்டர் பதிவில், கனடா நாடாளுமன்றத்தில் உரையாற்ற உக்ரைன் ஜனாதிபதி செலன்ஸ்கிக்கு அழைப்பு விடுத்துள்ளேன். உக்ரேனியர்களின் துணிச்சல் மற்றும் பின்னடைவு மற்றும் ஜனாதிபதி காட்டிய தலைமை ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டுள்ளனர். உக்ரைனுக்கு சிறப்பு ராணுவ உபகரணங்கள் வழங்கப்படும் என ஜனாதிபதி விளாடிமிர் செலன்ஸ்கியிடம் தெரிவித்தேன். ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகள் மற்றும் மனிதாபிமான உதவிகள் குறித்தும் செலன்ஸ்கியிடம் ஆலோசித்தேன் என பதிவிட்டுள்ளார்.

## உக்ரைனில் ரஷ்யா இரசாயன ஆயுத தாக்குதல் அல்லது உயிரியல் ஆயுத தாக்குதல்களில் ஈடுபடலாம்-வெள்ளை மாளிகை எச்சரிக்கை

உக்ரைனில் ரஷ்யா இரசாயன ஆயுத தாக்குதல் அல்லது உயிரியல் ஆயுத தாக்குதல்களில் ஈடுபடலாம் என வெள்ளை மாளிகை எச்சரித்துள்ளது. அமெரிக்காவின் உயிரியல் ஆயுத ஆய்வகங்கள் -மற்றும் உக்ரைனில் இரசாயன ஆயுத முயற்சி குறித்து ரஷ்யா முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் அபத்தமானது என வெள்ளை மாளிகையின் ஜென் சாகி தெரிவித்துள்ளார்.



ஏற்கனவே திட்டமிடப்பட்ட தூண்டப்படாத தனக்கு தாக்குதல்களை நியாயப்படுத்துவதற்காக ரஸ்யா இவ்வாறான தகவல்களை வெளியிடுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை மேற்குலக அதிகாரிகளும் ரஸ்யா இரசாயன - உயிரியல் ஆயுதங்களை பயன்படுத்தக்கூடும் என எச்சரித்துள்ளனர்.

ரஸ்யா மரபுசாராத ஆயுதங்களை பயன்படுத்தலாம் என்பது குறித்து தாங்கள் அச்சமடைந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். ரஷ்யா அனேகமாக இரசாயன ஆயுதங்களையே பயன்படுத்தலாம் என தெரிவித்துள்ள அவர்கள் அதேவேளை சிறியளவு அணுவாயுதங்கள் உயிரியல் ஆயுதங்கள் குறித்தும் கவலை வெளியிட்டுள்ளனர். நாங்கள் கரிசனைகொள்வதற்கான நியாயமான காரணங்கள் உள்ளன என மேற்குலக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். ரஸ்யா மோதலில் ஈடுபட்ட ஏனைய இடங்களில் குறிப்பாக சிரியாவில் - ரஸ்யாவின் சகாக்கள் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தினார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

## முதன்முறையாக பன்றியின் இதயம் பொருத்தப்பட்ட நபர் 2 மாதங்களில் உயிரிழப்பு

உலகில் முதன்முறையாக அமெரிக்காவில் அறுவை சிகிச்சை மூலம் பன்றியின் இதயம் பொருத்தப்பட்ட நபர் செவ்வாய்க்கிழமை (08) உயிரிழந்தார். அமெரிக்காவில் உள்ள மேரிலேண்ட் மாகாணத்தை சேர்ந்தவர் டேவிட் பென்னட்டின் (57) இதயம் செயலிழக்கும் நிலையை எட்டியதால், கடந்த ஜனவரி 7 ஆம் திகதி அவருக்கு அறுவை சிகிச்சை மூலம் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் இதயம் பொருத்தப்பட்டது.

அவரின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு வந்ததாக அவருக்கு அறுவை சிகிச்சை செய்த மேரிலேண்ட் மருத்துவமனை தெரிவித்திருந்தது. அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதங்களான நிலையில், டேவிட் பென்னட் செவ்வாய்க்கிழமை மரணமடைந்தார். பல நாட்களுக்கு முன்பிருந்தே டேவிட் பென்னட்டின் உடல்நிலை மோசமடையத் தொடங்கியதாக குறிப்பிட்டுள்ள மருத்துவர்கள் வேறு எவ்வித உறுதியான காரணங்களையும் கூறவில்லை.



## பேரறிவாளனுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் பிணை வழங்கியது

இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் சிறைத்தண்டனை அனுபவிக்கும் பேரறிவாளனுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. கடந்த 32 வருடங்களாக சிறைத்தண்டனை அனுபவிப்பதை சுட்டிக்காட்டிய நீதிபதிகளான எல்.நாகேஸ்வரராவ், பீ.ஆர். கவை ஆகியோர் பேரறிவாளனுக்கு பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளனர். சிறைத்தண்டனை அனுபவிக்கும் பேரறிவாளனுக்கு உச்ச நீதிமன்றத்தால் பிணை வழங்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்திய மத்திய அரசு எதிர்ப்பு தெரிவித்தாலும், மனுதாரர் 30 வருடங்களுக்கு மேலாக சிறையில் இருப்பதை கருத்திற்கொண்டு அவருக்கு பிணை வழங்கப்படுவதாக உயர் நீதிமன்ற நீதிபதிகள் தமது தீர்ப்பில் அறிவித்துள்ளனர். மாதாந்தம் முதலாவது வாரத்தில் ஜோலார்பேட்டை பொலிஸ் நிலையத்திற்கு சென்று பேரறிவாளன் கையொப்பமிட வேண்டும் என நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவிக்கும் 07 பேரில் சாந்தன், முருகன் மற்றும் பேரறிவாளன் ஆகியோருக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்த தண்டனை கடந்த 2014 ஆம் ஆண்டு ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.



## மசகு எண்ணெய் விலை வரலாறு காணாத வகையில் அதிகரிப்பு

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது. ஒரு பீப்பாய் பிரெண்ட் மசகு எண்ணெய் விலை 9.9% அதிகரித்து 129.78 டொலராக உயர்ந்துள்ளது. இது 2008ஆம் ஆண்டுக்குப் பிறகு பதிவான அதிகபட்ச விலையாகும். **WTI** மசகு எண்ணெய் பீப்பாய்க்கு 126.51 டொலராக உயர்ந்துள்ளது.




## அமெரிக்காவில் வரலாறு காணாத அளவு பணவீக்கம்!

அண்மைய கால உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின்படி அமெரிக்காவின் பண வீக்கம் கடந்த ஒரு மாத காலத்தில் உயர்வை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நான்கு தசாப்தங்களுக்கு பின்னர் இவ்வாறு பண வீக்கம் அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதன்படி, பணவீக்கத்தின் நுகர்வோர் விலை குறியீட்டு அளவீடு பெப்ரவரியில் 7.9 வீதமாக உயர்ந்தது. இது ஆண்டின் தொடக்கத்தில் 7.5 வீதமாக இருந்தது. எவ்வாறாயினும், 1982க்கு பின்னர் மிக உயர்ந்த விகிதமாக இது கருதப்படுகின்றது. ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் இறக்குமதிக்கு தடை விதிப்பதற்கு அமெரிக்காவும், பிரித்தானியாவும் முடிவெடுத்துள்ள நிலையில், உலகளாவிய சந்தைகளில் கச்சா எண்ணெய் விலை சடுதியாக உயர்ந்துள்ளது.

இந்நிலையில், அடுத்த வாரம் இடைக்காலத் தேர்தலை எதிர்கொள்ளும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு இந்த விவகாரம் ஒரு பாரிய தலைவலியாக இருக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், விலை உயர்வை குறைக்க தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்பேன் என அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இதனிடையே, உற்பத்தியை அதிகரிக்க எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளை அமெரிக்கா வற்புறுத்த முயற்சிக்கிறது என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

இதேவேளை, உணவு பொருட்களின் விலைகளும் ஏறுமுகத்தில் உள்ளன. கடந்த 12 மாதங்களில் 8.6 வீதம் விலை உயர்ந்துள்ளது. இது ஏப்ரல் 1981க்கு பிறகு ஆண்டு விகிதத்தின் அதிகபட்ச விகிதத்தைக் குறிக்கிறது. இந்நிலையில், அடுத்த வாரம், ஃபெடரல் ரிசர்வ் - அமெரிக்காவின் மத்திய வங்கி - பணவீக்கம் தொடர்பில் கூடி ஆராய உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது வட்டி விகிதங்களை உயர்த்தும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.































இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 13.03.2022 அன்று வெளியிடப்பட்டது.